# 'விசா' பெறுமலே இந்தியாவுக்குப் போகலாம்


Registered as a NewsPaper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49    மலர் 12
போன்: 389    இதழ்: 116
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 24 ரபி. ஆகிர் 2 ஞாயிற்றுக்கிழமை [7-6-70]



பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு


## இந்திய தூதரகம் அறிவிப்பு

கோட்டை, சனி

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்ல விரும்புவோர் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திடமிருந்து 'விசா' பெறவேண்டிய அவசியம் இப்போது இல்லை. இந்தியாவுக்குச் சென்று இருபத்தொரு தினங்களுக்குள் திரும்புவோர்கள் 'விசா' பெறவேண்டியதில்லையென்று இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது. இம் மாதம் நான்காம் திகதிமுதல் இந்தியா செல்வோருக்குவிசா வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

இதற்குமுன்னர் இங்கிருந்து இந்தியா செல்பவர்கள் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் 'விசா' பெற்றுச் செல்லவேண்டியிருந்தது.

இந்தியாவுக்கு யாத்திரை செல்வோரும் உல்லாசப்பிரயாணம் செய்வோரும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து 'பாஸ்போர்ட்' பெற்றுக்கொண்டால் அதாவது இந்தியாவுக்குச் செல்வதற்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதியைப்பெற்றுக் கொண்டால் இந்தியாவில் தங்கியிருப்பதற்கான 'விசா' அனுமதியை இந்தியத் தூதரகத்திடமிருந்து பெறவேண்டியதில்லை. இந்தியாவில் மூன்றுவாரங்களுக்கு அதாவது 21 தினங்களுக்கு மேல் தங்கியிருக்கவிரும்புபவர்கள் இந்திய தூதரகத்திடம் 'விசா' பெறவேண்டியது அவசியம்.

## பிரதமரை வரவேற்க
## புங்குடுதீவு கி. ச. தீர்மானம்

புங்குடுதீவு, ஞாயிறு

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை வரவழைத்து, அவருக்கு மகத்தான வரவேற்பு ஒன்றை அளிப்பதென புங்குடுதீவு கிராமசபை முடிவு செய்துள்ளது. கிராமசபைத் தலைவர் திரு. க. மதியாபரணம் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேறியது.

புதிய தமிழ் அமைச்சரான திரு. செல்லையா குமாரசூரியர், உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகிய மூவரையும் புங்குடுதீவுக்குஅழைத்து அவர்களுக்கு வரவேற்பளிப்பதென்ற தீர்மானமும் நிறைவேறியது. தீர்மானங்கள் உடனடியாக பிரதமருக்கும், குறிப்பிட்ட அமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

பிரதமருக்கும், புதிய அமைச்சர்களுக்கும் வடபகுதியில் வரவேற்பு அளிப்பதென்ற தீர்மானத்தை நிறைவேற்றிய முதலாவது உள்ளூராட்சி மன்றம் இதுவேயாகும்.

## தமிழரசு ஆட்சிமன்றக்குழு தீர்மானம்:

# முற்போக்கு, சோஷலிச திட்டங்களை தமிழரசுக் கட்சி ஆதரிக்கும்

## தமிழினத்தின் உரிமைகளை பாதுகாக்கவும் தவருதாம்

(நமது சிறப்பு நிருபர்)

கொழும்பு, சனி

கூட்டரசாங்கம் மேற்கொள்ளும் முற்போக்கான நடவடிக்கைகளையும், சோஷலிசத் திட்டங்களையும் தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றக் குழு ஆதரிக்கும். நேற்றுக் கொழும்பில் கூடிய இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றக் குழு இந்த முடிவை எடுத்துக்கொண்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சிமன்றக் குழு பார்லிமெண்டில் தனித்து இயங்குவதென்று தீர்மானித்தது.

காங்கேசன்துறை எம்.பி. திரு. எஸ். ஜே. செல்வநாயகம் தலைமையில் அவரது இல்லத்தில் இக்குழுக் கூட்டம் நடந்தது.

கூட்டரசாங்கம் மேற்கொள்ளும் முற்போக்கான நடவடிக்கைகளையும், சோஷ...

தனிக் கொறடாவின் கீழ் இயங்குவதென்றும் ஆட்சிமன்றக்குழு தீர்மானித்தது

## நன்மையானதிட்டங்களுக்கு ஆதரவு நல்குங்கள்
### தமிழரசு, காங்கிரசுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புதிய அரசாங்கம், சிறுபான்மை இனத்துக்கு நன்மையளிக்கக் கூடிய விதத்தில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும்படி, தமிழ் அரசியல் கட்சிகளான, தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர்களை கோரும் தீர்மானம் தென்மராட்சி கிழக்கு இராமநாதன் கழக கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

புலவர் சி. சின்னையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், வடபகுதியில்

...செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. எஸ். எம். கமலநாதன், உப-தலைவர்கள் திரு. மு. விக்கினேஸ்வரன், திரு. எஸ். கந்தசாமி, பொதுச் செயலாளர்: திரு. இ. யோகானந்தன், உப-செயலாளர்: தி. சி. செல்வகுமார், தனாதிகாரி: தி. பொ சண்முகநாதன், செயற்குழு உறுப்பினர்களாக ஐவர் தெரிவு செய்யப்பட்டனர்.

## வி. என். னுக்கு 41 வெண்-செந்தாமரை

மட்டுவில், சனி

சாவகச்சேரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினத்தின் 41-வது பிறந்ததினத்தை யொட்டி, அவரின் அனுதாபிகள் 41 வெண்-செந்தாமரை மலர்களை பரிசாக அளித்து தமது பிறந்தநாள் ஆசியையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டனர்.

## "நாட்டின் முன்னேற்றத்துக்கு வேற்றுமைகளை மறப்போம்"

## இலங்கை ஒலிபரப்புக்

## வாடகை கட்டுப்பாட்டு சட்டம்

கொழும்பு, ஞாயிறு

எல்லா வாடகை வீடுகளையும், வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கொண்டுவர வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் முடிவு செய்துள்ளார். வாடகை வீட்டில் குடியிருப்பவர்களிடம் நிலக்கிழார்கள் அதிகமாக வாடகைப்பணம் அறவிடுவதைத் தடைசெய்யும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

வாடகை வீடுகளை குறைந்த வாடகையில் அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஒன்றையும் வீடமைப்பு அமைச்சு செயல்படுத்த முடிவு செய்துள்ளது. சிபிஏ

## புதிய சபாநாயகர்

கொழும்பு, ஞாயிறு

கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஸ்ரான்லி திலகரத்தின ஆட்சிமன்ற சபாநாயகராக ஆட்சி மன்றக் குழுவினால் பிரேரிக்கப்பட்டுள்ளார்.

திரு. ஐ. ஏ. காதர் உப சபாநாயகர் பதவிக்கும் அரசாங்கக் குழுத் தலைவர் பதவிக்கு திரு. பஸ்கோலும் பிரேரிக்கப்பட்டுள்ளனர். இன்று ஆட்சிமன்றம் முதல் தடவையாகக் கூடிசபாநாயகரைத் தெரிவுசெய்யும்,

## நீதிமன்றங்கள் தமிழிலும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

[illegible] மநாதன் கழக கூட்டத்தில் ஏகமனதாக நிறை வேற்றப் பட்டது.

புலவர் சி. சின்னையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், வடபகுதியில் இராமநாதன் பல்கலைக் கழகத்தை நிறுவுவதோடு, கிழக்கு மாகாணத்திலும் பல்கலைக் கழகம் அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி புதிய அரசாங்கத்தை கோரும் தீர்மானமும் நிறைவேறியது

இலங்கையில் வாழும் சகல பிரஜைகளும், இன, மத, வகுப்பு வேறுபாடின்றி, மனித குலத்தவர்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமையாக வாழ அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேறியது.

கழக உறுப்பினர்களாக கீழ்க்காணுவோர் தெரிவு [illegible] உறுப்பினர்களாக இவர் தெரிவு செய்யப்பட்டனர்.

## "நாட்டின் முன்னேற்றத்துக்கு வேற்றுமைகளை மறப்போம்"

அனுராதபுரம் சனி

'எமது அரசியல் போராட்டம் முடிவடைந்துவிட்டது. இனி அடுத்தபோராட்டம் பொருளாதாரப் போராட்டமாகும் அதாவது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காகப் பாடுபடுவதேயாகும். மக்கள் யாவரும் தங்களுக்கிடையிலுள்ள அரசியல் வேறுபாடுகளை மறந்துவிட்டு ஒன்று சேர்ந்து நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உழைக்கவேண்டுமெனக்கேட்டுக் கொள்ளுகிறேன்.'

அனுராதபுர வாக்காளர்கள் தனக்களித்த வரவேற்புபசராத்தில் உரையாற்றிய ஆட்சிமன்ற விவகார அமைச்சர் திரு. கே. பி ரத்ணுயக்கா மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் தோற்றதற்கு ஒரு காரணம் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பிரிந்து இருந்தமையேயாகும். இந்தத் தவறை புதிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் விடமாட்டார்கள் எனக் குறிப்பிட்டார்.

[illegible] பார்லிமெண்டில் தனித்து இயங்குவதென்று தீர்மானித்தது.

திரு. எஸ். ஜெ. செல்வ[illegible] கம் தலைமையில் அ[illegible]து இல்லத்தில் இக்குழுக் கூட்டம் நடந்தது.

கூட்டரசாங்கம் மேற்கொள்ளும் முற்போக்கான நடவடிக்கைகளையும், [illegible]ஷலிசத் திட்டங்களையும் தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றக் குழு ஆதரிப்பதெனத் தீர்மானித்துள்ளது.

அத்துடன் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்க நடவடிக்கைகளை தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றக்குழு மேற்கொள்ளத் தவறமாட்டாதெனவும் மேற்படி தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி ஆசனங்களில்

## இலங்கை ஒலிபரப்புக் கூ[illegible]த்தானத்திற்கு பத்திரிகையாளர் நியமனம்

கோட்டை, சனி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகசபை உறுப்பினராகப் பத்திரிகையாளரான திரு. எச். எம். பி. மொஹிதீன் நியமிக்கப்பட்டிருக்கிருர். திரு. மொஹிதீன் இச்சபையின் ஐந்தாவது அங்கத்தவராக இருப்பார்.

# குடியரசு அரசியல் திட்டம்: சிங்களமொழிக்குமுதலிடம்!

## சிம்மாசனபிரசங்கத்தில்முக்கிய அம்சங்கள்

கொழும்பு, ஞாயிறு

ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுகக முற்பட்ட ஐக்கிய தேசிய கட்சியினரின் செயலை மாற்றி இந் நாட்டின் பெரும்பான்மை மக்களின் மொழியான சிங்கள மொழிக்கு முதலிடம் கொடுத்தல்.

சிம்மாசனப் பிரசங்கத்தில் மேற்கண்ட அம்சம்இடம் பெறுமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்,

ஆட்சிமன்ற திறப்பு விழாவை, மகாதேசாதிப திரு வில்லியம் கோபல்லவா இம்மாதம் 14ம் தேதி ஆரம்பித்து சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துவார் அப்போது அவர் பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் சோஷலிச சமுதாயம் பற்றி வெளியிடுவார்.

சிம்மாசனப் பிரசங்கத்தில் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனததில் இடம்பெற்ற அம்சங்கள். இருக்குமென அரசியல் அவதானிகள்கருதுகின்றனர்.

பின்வரும் அம்சங்கள் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெறுமென கருதப்படுகிறது.

0 எமது இலங்கையின் பழைய பெயரான லங்கா பெயரை நினைவுபடுத்தி குடியரசு அரசியல் திட்டத்தை கொண்டுவருதல்.

0 மக்களுக்கும் நிர்வாகத்திற்கும் தொடர்பேற்படுத்தும் வகையில் நிறுவனங்களின் தொழிற்சபையையும், மக்கள் சபையும் நிறுவுவது.

0 பொதுநல சேவையை விரிவுபடுத்துதல், இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவை, இலவசமான அனுதைநிலையங்கள், வயோதிப நிலையங்கள், இலவச சட்ட உதவி, இலவசக் குழந்தை உணவு, குறைந்த செலவுப் பயணம்.

0 தேசிய சமுதாய இன்சூரன்ஸ் திட்டம், தேசிய பென்சன் திட்டம் ஆகிய வற்றை ஆரம்பித்தல்.

0 வர்த்தக ஏஜென்சிகளை அரசுநிறுவுதல்.

0 தோட்டத் தொழிலாளர் உட்பட தனியார் தொழிலாளருக்கு நல்ல சூழ்நிலையைக் கொடுக்க சட்டங்களை வகுத்தல்.

0 அரசாங்க திரைப்படகார்பரேசனை உருவாக்கல்.

0 பத்திரிகை கவுன்சிலை நிறுவுதல்.

0 66 விகித மக்களின் சமயமாகிய பௌத்த சமயத்திற்கு உரியஇடமளிப்பதோடு ஏனைய சமயத்தவரின் வழிபாட்டிற்கு பூரண சுதந்திரம் அளித்தல்.

## மன்னாரில் வன்செயல் கட்டுக் கடங்கியது!

யாழ்ப்பாணம், ஞாயிறு

மன்னார் தொகுதியில் தேர்தலைத் தொடர்ந்து இரு இனங்களுக்கிடையில் ஏற்பட்ட வன்செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் தொகுதியில் உள்ள அடம்பன் காரியாதிகாரி பகுதியைச் சேர்ந்த பெரியமடு, விடலைதீவு ஆகிய இடங்களிலேயே இந்த வன்முறை செயல்கள் நடைபெற்றன.

சிலர் பயமுறுத்தப்பட்டதாகவும் தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உடனடியாக பொலிஸ் கோஷ்டியொன்று அப்பகுதிக்கு சென்றதை தொடர்ந்து இச்சம்பவங்கள் கட்டுப்படுத்தப்பட்டு, மீண்டும், அப்பகுதிகளில் அமைதி நிலைநாட்டப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சைவ பரிபாலகர் மகாநாடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் இம் மாதம் 12 ம் திகதி நடைபெறவிருந்த சைவ பரிபாலகர்களின் மகாநாடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அன்றையதினம் வடபகுதி அரசாங்க அதிபர் முக்கிய விஷயமாககொழும்புசெல்ல வேண்டியிருப்பதாலே யே மகாநாடு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் படுகிறது.

இம்மாத கடைசிப் பகுதியில் இம்மகாநாடு நடைபெறவிருப்பதாகத் தெரிவித்த வடபகுதிப் பொலிஸ் சுப்பிரின்டன் திருஆர், சுந்தரலிங்கம் பின்வரும் விஷயங்கள் குறித்துநடக்கவிருக்கும் மகாநாட்டில் ஆராயப்படவிருப்பதால் அவைபற்றி ஆராய்ந்து அன்றுகருத்துத் தெரிவிக்குமாறு பரிபாலகர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

0 ஆலயங்களில் நடக்கும் திருட்டுக்களை தடுப்பதற்கு பொலிசாருக்கு உதவியளிப்பதற்காக கோயில் தொண்டர்சபையை பயன்படுத்துவது.

0 சில சைவாலயங்களின் வீதி ளில் மதுபானம் விற்பனை செய்யப்படுவது தடுக்கப்பட்டு அப் பகுதிகளை புனித இடங்களாக்குவதற்கான நடவடிக்கைகள்.

0 சில இடங்களில் கோயில் பூஷகர்கள் தாக்கப்பட்டிருப்பதாகவும் இனிமேல் இப்படியான சம்பவங்களுக்கு இடங்கொடாது பூஷகர்களுக்கு மதிப்புக் கொடுப்பது.

## முன்பு இருந்த இடங்களுக்கு ஆசிரியர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'சியவச'வை எதிர்த்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக வடபகுதியிலிடுந்து நுவரெலியாவுக்கும், விந்துள்ளாவுக்கும் கடந்த ஆகஸ்ட் மாதம் திடீர் இடமாற்றம் செய்யப்பட்ட தேசிய ஆசிரியர் சங்கச் செயலாளர், உபதலைவர் ஆகியோரை அவர்கள் முன்பு கடமையாற்றிய பாடசாலைகளுக்கு உடனடியாக இடமாற்றஞ் செய்யும்படி கல்வியமைச்சர் ஜனுப் பதியுதீன் மஹ்மூத் உத்தரவிட்டுள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, அளவெட்டி அருணேதயாக கல்லூரி ஆகியவற்றில் கடமையாற்றிய தேசிய ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. இ.சிவநேசனும், உப-தலைவர் திரு. கே. சந்தியா பிள்ளையும் முன்பிருந்த கல்லூரிகளுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

முன்னைய அரசாங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்றத்தை ரத்துச் செய்யும்படியும், அன்றேல் பாரபட்சமான விசாரணை நடத்தும்படியும் கோரி வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் தலைமையில் பல ஆசிரியர் சங்கங்கள் மாபெரும் கூட்டமொன்றைக் கடந்த செப்டம்பர் மாதம் நடாத்தியது தெரிந்ததே.

[illegible] மன்றக்குழு தீர்மானித்தது

[illegible] முடிவு செய்துள்ளது. [illegible]

# நீதிமன்றங்கள் தமிழிலும் செயற்பட வேண்டும்

## தாய்மொழி போதனுமொழி

### காங்கிரஸ் செயற்குழு தீர்மானம்

கொழும்பு. சனி

இலங்கை பூராவுமுள்ள நீதிமன்றங்களில் சிங்கள மொழியில் கருமம் நடைபெறுவதுபோலவே தமிழ் மொழியிலும் நடைபெற வேண்டும்.

என்ற தீர்மானம் அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

கொழும்பில் நேற்று முன்தினம் காங்கிரஸ் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது.

தாய்மொழியே போதனுமொழியாக இருக்கவேண்டும். பெற்ருேர் விரும்பிய மொழியை அனுமதிக்கக் கூடாதென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கொள்கைகளுக்கமையக் காங்கிரஸ் கட்சி இனிமேல் இயங்கிவருவதென முடிவு செய்யப்பட்டது.

## 40 வருட கொண்டையை வெட்டினுர்

பொல்காவலை, சனி

பொதுத்தேர்தல் முடிவுகள் சம்பந்தமாக பந்தயம் பிடித்த ஒருவர் கடந்த 40 வருடங்களாக வளர்த்துவந்த தமது கொண்டையை வெட்டி பந்தயத்தை நிறைவேற்றியிருக்கிருர். இன்னும் சிலர் பந்தயத்தின் பேரில் ஊரையும் குடும்பங்களையும் விடுத்து வெளியூர்களுக்குப்போய் இருக்கிருர்கள். பலர் ஆயிரக்கணக்கான ரூபாய்களை பந்தயத்தில் சேர்ந்திருக்கிருர்கள்.

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

திவ்விய ஜீவன சங்கக் கூட்டுப் பிரார்த்தனை பி.ப 5-30 முதல் 6-30 வரை வண்ணை பெருமாள் கோவிலில் நடைபெறும்: அத்துடன் பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றியும், ஸ்ரீஇராமரைப் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இன்று

## பிரேஸில் இங்கிலாந்து மோதுகின்றது

மெக்ஸிக்கோ, யூன் 7

மெக்ஸிக்கோவில் நடைபெறும் உலக உதைபந்தாட்டப் போட்டியில், தென் அமெரிக்கக் கோஷ்டிகளான பிரேஸில், பேரு போன்ற நாடுகள் திறமையாக விளையாவடுதாக உலக உதைபந்தாட்ட அவதானிகள் தெரிவிக்கின்றனர். இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகள் மெக்ஸிக்கோவின் உஷ்ணநிலை காரணமாக, திறமையாக விளையாடமுடியாது திண்டாடுவதாகவும், அவர்கள் தெரிவித்தனர்

இங்கிலாந்துக்கும்-பிரேஸிலுக்கும் இன்று நடைபெறவிருக்கும் ஆட்டத்தில் வெற்றி பெறும் கோஷ்டியே அனேகமாக; இம்முறை உலக உதைபந்தாட்டக் கிண்ணத்தை கைப்பற்றக் கூடுமென்றும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பிரேஸில் கோஷ்டிக்கு 'உதைபந்தாட்ட மன்னர்' என்ற பட்டம் பெற்ற வீரர் பேல் தலைமை தாங்குவதால் பிரேஸில் கோஷ்டி மிகப் பலம் கொண்ட கோஷ்டியாகத் திகழ்கின்றது. இங்கிலாந்து கோஷ்டியினரும், அந்நாட்டு மக்களும் இக்கோஷ்டியின் காப்டன் பொபிமோரின் சாமாத்திய ஆட்டத்தையே முழுக்க முழுக்க நம்பியிருக்கின்றனர்.

ஆட்சிமன்ற பிரதிநிதிகளுக்கு

## நீல நிற சிங்கம் பொறித்த லேபல்கள்!

கொழும்பு, ஞாயிறு

இன்றுபிற்பகல் 2 மணிக்கு சத்தியப்பிரமாணம் எடுக்க வரும் ஆட்சிமன்றப் பிரதிநிதிகளுக்கு நீல நிற சிங்கம் பொறித்த 'லேபல்'கள் வழங்கப்படும்.

சிவப்பு நிற சிங்கம் பொறித்த 'லேபல்'கள் ஆட்சிமன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வரும் செனட் அங்கத்தவர்களுக்கும் வழங்கப்படும்.

இன்று ஆட்சிமன்றம்கூடி சபாநாயகர், உபசபாநாயகரைத் தெரிவு செய்யும்.

## தீ அணைக்கப்படவில்லை; கொழும்பு நகரமெங்கும் புகைமண்டலம்

கோட்டை, சனி

கொழும்பு கிரான்பாஸ் 'செல்பிஸ்சோரீஸில்' நேற்று ஏற்பட்ட பயங்கர தீவிபத்தினுல் பல்லாயிரக்கணக்கான ரூபாய் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் சேதம் எவ்வளவு என இதுவரை மதிப்பிடப்படவில்லை. கட்டிடங்கள் முற்றுக சேதமாகின.

தீயணைக்கும் படையினரால் தீயை அணைக்க முடியாமல் போனதால் தீயணைக்கும் சாதனங்களை திருப்பி எடுக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

பக்கத்துக் கட்டிடங்களில் தீபரவாமல் தடுப்பதற்காக அவை தகர்த்து எறியப்பட்டன. இதில் 500-க்கும் அதிகமான பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். இராணுவமும் உதவிக்கு அழைக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் கொழும்பு நகரம் எல்லாம் புகைமண்டலமாகவே காட்சியளித்தது. தீப்பிடித்ததற்குரிய காரணம் இதுவரை தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

சித்தி நிச்சயம். ஜி. சி. ஈ (சாதாரணம்) கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், (உயர்தரம்) கலை / வர்த்தகம் ஜி. ஏ கியூ. ஆசிரிய பயிற்சி கலாசாலை பிரவேசம். விசேஷ ஆங்கிலம்/சிங்களம் சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக கணிதம், பகல்/மாலை/ஓய்வுநாள் வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்கப்படுகின்றன, அனுபவமிக்க பட்டதாரிகளால் நடாத்தப்படுவது. மகளிருக்கு தனி விடுதி. யூனைட்டெட் அக்கடமி, நெல்லியடி, கரவெட்டி. 2276

### தேவை

திறமை வாய்ந்த ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் உடனே தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் காண்க. 6, பெரிய தெரு, யாழ்ப்பாணம். 2287

ஒவ்வொரு பிரதி ஜே. எச். மாட்டின் எழுதிய யாழ்ப்பாணம் பற்றிய குறிப்புகள், ஏ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாண குடாநாடு பற்றிய கையேடு நாவலர் கோட்டம் — யாழ்ப்பாண சரித்திரம், பிறிற்ரோ மொழி பெயர்த்த யாழ்ப்பாண வைபவமாலை முத்து கிருஷ்ணன் பதிப்பித்த தேச வளமை, ஜெகதீசஐயர் எழுதிய தென் இந்திய விழாக்கள், குமாரசாமி பதிப்பித்த தண்டிகை கனகராயன் பள்ளு, அரசாங்க பிரசுரம்- இந்துமத கோவில் சம்பந்தபட்ட மனுக்கள் — ஆலயப் பிரவேசம், மிருகபலி. Kenneth David, M. A., Room No. 3, Blue Ribbon. 2289

## கேள்வி விளம்பரம்

வடமராட்சி கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கக் கட்டிடத்திற்கு கூலி வேலைகளுக்கான கேள்விகள், ரூபா 50,000/- அல்லது மேற்பட அரசாங்கத்தில் அல்லது உள்ளூராட்சி மன்றங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் சங்கத்தில் வைப்புப் பணமாக ரூபா 100/-ம் கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 5/-ம் செலுத்தி 18-6-70 தொடக்கம் 25-6-70 வரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் ''கட்டிட வேலைக்கான கேள்வி'' என எழுதப்பட்டு சீல் இட்டு, பதிவுத் தபால் மூலம் 27-6-70 பகல் 12 மணிக்கு முன் சங்கத் தலைவருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ரூபா 1000/- பிணைப்பணம் செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

சு. குமாரசுவாமி,
தலைவர்.

6-6-70 2297

### தேவை

லிகிதர்:

ஆங்கில அறிவுள்ள சைக்கிள் ஓடத் தெரிந்த லிகிதர் தேவை. பிணைப்பணம் ரூபா 3000/-, சம்பளம் ரூபா 200/-. விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். P. நாகலிங்கம், புற்றளை, புலோலி. 2288

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா நாகேஷ்—வி கே. ராமசாமி நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 10-00 போயா, பிரிபோயா 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
நாகேஷ் - எம். ஆர். ஆர். வாசு
நடித்த
பெண்ணை வாழ விடுங்கள்

இப்பொழுது திரையிடப்படுகிறது

வண்ணை
வைத்தீஸ்வர வித்தியாலயம்
பழையமாணவர் சங்கம்

வைத்தீஸ்வர வித்தியாலயம் பழைய மாணவர் தினம் 12-6-70 வெள்ளிக்கிழமை கொண்டாடப்படும். நிகழ்ச்சிகள் மு. ப. 8-30 தொடக்கம் மாலை 5-00 மணிவரை நடைபெறும். சகல பழைய மாணவர்களும் வருட சந்தா ரூபா 2-00-ம் விழாவுக்கான விசேட சந்தா ரூபா 3-00 ம் 10-6-70க்கு முன்னர் செயலாளரிடம் செலுத்தி விழாவில் பங்குபற்றும்படி வேண்டப்படுகின்றனர்.

எஸ். பீ. பாலசுப்பிரமணியம்,
தி. வில்வகுமார்.
இணைச்செயலாளர்கள்

வைத்தீஸ்வர வித்தியாலயம்
யாழ்ப்பாணம், 5-6-70. 2295

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 24-ம் திகதி [7-6-70]

**மேஷம்-** துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு மாணவர்களுக்குக் கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

**ரிஷிபம்-** அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும் கலைஞர்கள் போற்றப்படுவார்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் ஏற்படும்.

**மிதுனம்-** செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

**கடகம்-** மோசடிகள் நடக்கும். சகோதரவழியால் சஞ்சலம் ஏற்படலாம். துணிவேதுணையென இருக்கவும்.

**சிம்மம்-** பேச்சுவன்மை உங்களுக்குப் பெரும் புகழைத் தேடித்தரும் சிலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்துக்கும் இடமுண்டு. தன்மான உணர்ச்சி தலைதூக்கும்.

**கன்னி-** உடல் நலனும் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்திமனப்பான்மையை உருவாக்கும்.

**துலாம்-** பொன்னான சந்தர்ப்பமொன்று இன்று கிடைக்கும். இதயச்சுமை அகலும், தொழில்துறையில் வெற்றிகளும் உண்டு.

**விருட்சிகம்-** உறவினர்கள் வருகை. வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும். எதிலும் புதுமையைக் காண விரும்புவீர்கள்.

**தனுசு-** முயற்சிகளில் சிக்கல்கள் தோன்றும். தொழில்துறைகளிலும் தலைமறைவு நடவடிக்கைகள் உருவாகலாம். மேலதிகாரிகளின் கூட்டு...

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 7—6-70

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, -30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 சித்திரம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு. 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-10 பேச்சு, 6-15 வாத்திய இசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

— —

## ஜெயக்கொடிக்கு வரவேற்பு

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டித் தொகுதியின் புதிய ... உறுப்பினர் திரு. கே. ஜெயக்கொடிக்குத் தொகுதியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொடிகாமம் கொலை வழக்கு

## சாட்சி வராததால் விசாரணை ஒத்திவைப்பு

மட்டுவில், வெள்ளி

சாட்சிகளில் ஒருவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகமுடியாததின் காரணமாக கொடிகாமம் பஸ்சாரதியான சின்னப்பொடிவேலு கொலைவழக்கை இன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் விசாரணை செய்யாது மேல்விசாரணையை இம்மாதம் 20-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

கொடிகாமம் பஸ்சாரதியான சின்னப்பொடிவேலுவை கடந்த மார்ச் மாதம் 21-ம் திகதி இரவு கொடிகாமம் பஸ்நிலையத்தில் வைத்து சுட்டுக்கொலை செய்ததாக அச்சுவேலியைச் சர்ந்த தம்பிமுத்து கணேசமூர்த்தி, தம்பிமுத்து நவரத்தினம் மஸ்கேலியாவைச் சேர்ந்த பெருமாள் இராமலிங்கம் ஆகிய மூவர்மீதும் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா இன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

விசாரணையின்போது முக்கிய சாட்சிகளில் ஒருவர் நீதிமன்றத்திற்கு ஆஜராக முடியாததின் காரணமாக மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா மேல்விசாரணையை இம்மாதம் 20-ம் திகதிவரை ஒத்திவைத்தார்

## 'ஸ்ரீமா ஆட்சியில் தமிழருக்கு கூடிய நன்மை' - கம்யூனிஸ்ட் பிரமுகர்

பருத்தித்துறை, சனி

'தமிழரசும், தமிழ் காங்கிரசும் சிறுபான்மைத்தமிழருக்கு பிரதிநிதித்துவம் கோரிப் போராடுவதாகக் கூறினார்கள். ஆனால் நமது புதிய பிரதமர் சிறீமா இவர்கள் கேட்காமலே சிறுபான்மைத் தமிழருக்கென ஒரு பிரதிநியை ஆட்சி மன்றத்தில் நியமித்தார். இந்தியத் தொழிலாளருக்காகமுதலிம்தொண்டமானை நியமன அங்கத்தவராக்கிய பெருமையும் சிறீமாவுக்கே உரியது. சிறீமா தனது ஆட்சிக் காலத்தில் செய்த சாதனைகளைப்போல யூ. என். பி. செய்யவில்லை என்பது வெளிப்படை'.

இவ்வாறு உடுப்பிட்டி கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட திரு பொன். குமாரசாமி கவுந்தில் முற்போக்கு வாலிபர் சங்க ஆதரவில், கவுந்தில் சனசமூக நிலைய முன்றவில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினர் திரு எஸ். மகேசன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு பொன். குமாரசாமி தொடர்ந்து கூறியதாவது:

'தமிழ்க் கட்சிகள் தங்கள் போராட்டங்கள் மூலம் எதுவும் சாதிக்கவில்லை. இதன் விளைவாக இன்று அவர்கள் சிங்கள் சகோதரர்களின் ஒத்துழைப்பை நாட ஆரம்பித்துள்ளனர். ஆனால் சிங்களவருடன் ஒத்துழைப்பதென்றால் சிங்கள முதலாளித்துவக் கட்சிகளுடன் சேர்ந்துஒத்துழைப்பதல்ல'.

## "தொடர்ந்து சேவை செய்வேன்" - டாக்டர் ஈ.எம்.வி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

''கடந்த ஆட்சி மன்றப் பொதுத்தேர்தலில் எனது சுகவீனம் காரணமாகத் தாங்கள் எல்லோரையும் நேரில் வந்து சந்திக்க முடியாதிருந்தேன். அப்படியாயிருந்தும் என்னை முழுமனதோடு ஆதரித்தீர்கள். கடந்தகாலத்தில் நான் செய்துள்ள சேவையையும் எனது கட்சியின் கொள்கை... மனதில்கொண்டே ... ஆதரித்தீர்கள். ஆட்சிமன்றத்தில் நான் ஒரு பிரதிநிதியாக இ... கூறிக்கொள்கிறேன்.

குறிப்பாக சென்ற தேர்தலில் எனது வெற்றிக்காக அயராது உழைத்த பெரியோர்கள், வாலிபர்கள், பெண்கள் அத்தனை பேர்களுக்கும் என் இதயத்தில் பொங்கி எழும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— —

## ஒடுக்கப்பட்டவரின் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

## காணித் தகராறினால் அரியாலையில் ஒருவர் கொலை

கொழும்புத்துறை, சனி

காணித் தகராறு காரணமாக ஒருவர் அவரது சகோதரரை கொலை செய்த சம்பவம் அரியாலையில் நேற்று நடந்துள்ளது.

அரியாலையைச் சேர்ந்த 45 வயதான குருநாதர் கந்தையா என்பவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது சகோதரரான குருநாதர் சின்னத்தம்பியை பொலிசார் தேடி வருகின்றனர்

இக்கொலை சம்பந்தமாகப் பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். காணித் தகராறே இக் கொலைக்குக் காரணமென பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

## வீடுகள் தரைமட்டம்!

### தெய்வாதீனமாக உயிர்தப்பினர்

உடுப்பிட்டி, சனி

கடந்த புதன்கிழமை இரவு சில மணத்தியாலங்களாகத் திடீரெனப் பலத்த சூறாவளியுடன் கூடிய பெரும்மழை இடி மின்னலுடன் வடமராட்சிப் பகுதியை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது-

கரணவாய் குஞ்சர்கடைப் பகுதியில் கடும் சூறாவளியில் சிக்கிய பனையொன்று இரு வீடுகளுக்குமேல் விழுந்ததால் இரு வீடுகளும் பலத்தசேதம் அடைந்துள்ளன. இரு வீடுக்ளிலும் நித்திரையில் இருந்த 8 பேர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர், வீடுகள் தரைமட்டமாகின.

நாவலர் மடம் என்னும் இடத்தில் பிரதான வீதியிலிருந்து நவிண்டில் செல்லும் வீதிக்கு இருபுறமும் பனையொன்று குறுக்காக மின்கம்பிகளுக்கு மேல் விழுந்ததால் வீடொன்றின் மதில் சுவர் இடிந்துள்ளதுடன் மின்கம்பமும் சரிந்துவிட்டது.

கரணவாய் தெற்கில் வாழைமரங்களும் முருங்கை மரங்களும் அடியோடு சாய்ந்து விட்டன, நள்ளிரவில் வருணபகவான் நடாத்திய இந்நாடகத்தால் கடலுக்குச் சென்ற மீனவர்கள் அவசரஅவசரமாக கரை திரும்பினர்- இதனால் வியாழக்கிழமை வடமராட்சிப் பகுதியில் மீன்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

— —

## அந்தோனியார் திருவிழா

உடுப்பிட்டி, சனி

வதிரி அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் நேற்று அந்தோனியார் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விசேட பூஜைகளும், திருச்சொரூபச் சுற்றுலாவும் நடைபெற்றன.

— —

## கோரிக்கை

கோட்டை, சனி

இலங்கை மலாய் சங்கம் தனது இனத்தின் பிரதிநிதி ஒருவரை நியமன எம். பி. யாகநியமிக்கப்படி பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை கோரியுள்ளது.

— —

## தேநீருக்குப் பதில்

## புதிய ஜே. பி.



யாழ்ப்பாணம், ஞாயிறு

பிரபல வர்த்தகரும், சமூகசேவையாளருமான திரு. வீரகத்திப் பிள்ளை இராசசேகரம் சமாதான நீதவானக நியமிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு, விக்னராஜா முன்னிலையில் ஜே. பி. யாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

தொண்டமானாற்றைச் சேர்ந்த இவர் தொண்டமானாறு மகாவித்தியாசாலை ஆசிரியர் - பெற்றூர் சங்க போஷகரான இவர் இலங்கை நூற்றல் நெய்தல் ஆலையின் தலைவரும், யாழ். ஐக்கியசங்கத்தின் நிர்வாகக் குழு அங்கத்தவருமாவார்.

நடித்த

# பெண்ணை வாழ விடுங்கள்


இப்பொழுது திரையிடப்படுகிறது

வின்ஸர்

(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

★ ஜெய்சங்கர்

★ ஜெயலலிதா

★ நாகேஷ் ★ சுந்தரராஜன்

நடித்த

முத்துச் சிப்பி



இப்பொழுது திரையிடப்படுகிறது

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

(போயா, பிரிப்போயா காலை 10-30)

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா

நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடிந்த





...காண விரும்புவீர்கள்.

தனுசு- முயற்சிகளில் சிக்கல்கள் தோன்றும். தொழில்துறைகளிலும் தலைமறைவு நடவடிக்கைகள் உருவாகலாம். மேலதிகாரிகளின் கட்டளைக்குப் பணிந்து நடக்கவும்,

மகரம்- இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். கண்ணியமான தினம்.

கும்பம்- பிரச்னைகள் மேலும் சிக்கலாகும் கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று.

மீனம்- தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள். தெய்வத்தின் துணையுமுண்டு.

சோதிடக் கலாநிதி

திருமலை க.வேலுப்பிள்ளை

## கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு இந்துக்கலாச்சார சங்கத்தின் கருத்தரங்கம் இன்று மாலை நடைபெறுகிறது. பஜனைகளும் ஆராதனைகளும் இடம்பெறுமென அறிவிக்கப்படுகிறது.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
கிங்கொங்
(KING KONG)
(English)

ராஜா (யாழ்ப்பாணம்)
Daily 3 Shows
Bobby Darin,
Emily Bank's
in
GUN FIGHT
IN
ABILENE
(cinema scope & color)

வெஸ்லிசினிமா
மணிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30 மணி
சிவாஜி - பத்மினி
நடித்த
புனர் ஜென்மம்

REGAL JAFFNA
Daily 3 Shows
Poya Prepoya 4 Shows
Hayley Mills
in
THAT DARN CAT


## வரவேற்பு

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டித் தொகுதியின் புதிய ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கே. ஜெயக்கொடிக்குத் தொகுதியின் பல பகுதிகளிலும் வரவேற்புகள் அளிக்கப்பட்டுவருகின்றன.

இவ்வரவேற்புகளில் திரு ஜெயக்கொடி அமைதியும் சமாதானமுமே வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பவை என்றும், அடக்குமுறையை மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்றும் வலியுறுத்தி வருகின்றார்

இளைஞர்களின் பேராதரவு தான் தனது வெற்றிக்கு மூலகாரணம் என்றும், இளைஞரைத் தம்மால் ஒருபோதும் மறக்கமுடியாது என்றும் வாலிபர்களின் பிரச்சினைகளைப் போக்குவதே தனது கடமை என்றும் இதற்கு வாலிபர்கள் தம்முடன் ஒத்துழைக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

சுழிபுரத்திலிருந்து

## தபால் மந்திரிக்கு வாழ்த்துதந்திகள்

சுழிபுரம், சனி

புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சர் அவையில் தபால் அமைச்சராக நியமிக்கப்பட்ட சுழிபுரத்தைச்சேர்ந்த செல்லையா குமாரசூரியருக்கு நூற்றுக்கு மேலான வாழ்த்துத் தந்திகள் சுழிபுரத்தில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன அமைதியும், கடவுள் நம்பிக்கையும், திறமையான கல்வி அறிவும் தான் தங்கள் மேன்மைக்கு வழிகாட்டியது என்ற வாசகத்தை அனேகர் தத்தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர். விரைவில் புதிய அமைச்சருக்கு சுழிபுரம் மக்கள் பெரும் வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

## கிளைகள் நிறுவ முயற்சி

வேலணை, சனி

ஊர்காவற்றுறையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளைகளை நிறுவ இப்பகுதியில் சிலர் ஆலோசித்துவருகின்றனர்.

இப்பகுதிகளில் கிளைகளை நிறுவுவதன் மூலம் இப் பகுதியின் தேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கடந்தகாலத்தில் நான் செய்துள்ள சேவையையும் எனது கட்சியின் கொள்கையையும் மனதில்கொண்டே என்னை ஆதரித்தீர்கள். ஆட்சிமன்றத்தில் நான் ஒரு பிரதிநிதியாக இல்லாவிட்டாலும் இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்திற்கும் குறிப்பாக நல்லூர்த் தொகுதி மக்களுக்கும் என்னால் இயன்ற சேவையைச் செய்து கொண்டே வருவேன்'' என்று முன்னாள் நல்லூர் எம் பி. யும், தமிழரசுக்கட்சித் தலைவருமான டாக்டர் ஈ எம். வி. நாகநாதன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எங்கள் சுதந்திரத்தையும் சுய மரியாதையையும் பாதுகாத்து பெரும்பான்மையினரான சிங்கள சகோதரரோடு ஒற்றுமையாகவும் வாழவழி செய்வது தான் இணைப்பாட்சியின் அடிப்படைக் கொள்கை அதற்காகப் பாராளுமன்றத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாடுபடுவேன் என்பதை அழுத்தந்திருத்தமாக எனது தொகுதி மக்களுக்கும் சிறப்பாக இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கும்

## முதலாளிகளின் கார்கள் பறிமுதலாகும்

அம்பலாங்கொடை, சனி

'கடந்த 5 வருட காலமும் மிக டாம்பீகமாக வாழ்க்கை நடாத்திய முதலாளிமார்களின் கார்களையும், ஜீப்புகளையும் அரசாங்கம் எடுத்து அவற்றை சாதாரண மனிதனுன் நலனுக்காகப் பயன்படுத்தும்'

அம்பலாங்கொடைசந்தை சதுக்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அம்பலாங்கொடை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. எஸ். சி. டி. சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் நாட்டின் நிர்வாகத்தில் வெகுவிரைவில் மக்கள் குழுககள் நிறுவப்படும்.

திறைசேரி சூன்யமாக உள்ள பொழுதும் அரசாங்கம்தான் வாக்குறுதியளித்தபடி மக்களுக்கு நிச்சயமாக இரண்டுபடியரிசி வழங்கும். தேர்தலில் வெற்றியடைந்தவர்கள் வெற்றி உற்சாகத்தில் அசம்பாவிதமான செயல்களில் ஈடுபடக்கூடாது தோல்வியுற்றவர்களை அமைதியாக வாழவிடவேண்டும். எனக் கூறினார்.

...றேன்.

## ஒடுக்கப்பட்டவரின் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

'உங்கள் வெற்றி தொழிலாளர்களினதும். ஒதுக்கப்பட்டவர்களினதும் வெற்றியாகும். உங்களுடைய ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரம், மற்றும் நலன்கள் அக்கறையுடன் கவனிக்கப்படும் என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை'.

இலங்கை திருவள்ளுவர் முன்னேற்றக்கழகம் இலங்கையின் புதிய பிரதம மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள பாராட்டுத் தந்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

## வீதி விஸ்தரிப்பு

சுழிபுரம், சனி

சுழிபுரம் பறாளை முருகமூர்த்தி கோவில் முன்பாகவுள்ள வயல்களுக்கு ஊடாகச் சென்று சுழிபுரம் கண்ணகையம்மன் கோவில் முன் பாகவந்தடையும்பாதையை விஸ்தரித்து ரூபா12,000க்கு மேற்பட்ட பணத்தை செலவுசெய்யும் ஓர் திட்டம் ஆலய வழிபடு சபையோரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திட்டமிடப்பட்ட பணத்தில் ரூபா 5,000 இதுவரை பொதுமக்களிடம்இருந்து திரட்டப்பட்டுள்ளது. இருபக்கமும் பாதையை விஸ்தரித்தல், பாதையின் நடுவேயுள்ள ஒரு கிணறு மூடுதல், அருகேயுள்ள கிணறு கட்டுதல் பாதையை செப்பனிட்டு நவீன பாதையாக அமைத்தல் போன்ற வேலைகளை நடைபெறவேண்டியவையாகும். சிரமதான முறையில் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

## மீண்டும் வேலை?

கோட்டை, சனி

1966ல் கட்டாய லீவில் அனுப்பப்பட்ட ராணுவ வீரர் எழுவரை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதுபற்றிய தீர்மானத்தை இன்னும் இரண்டு வாரத்தில் அறிவிக்கப்படும் என ராணுவப் படை ஆணையாளர் மேஜர் ஜெனரல் சேபலஅட்டிகல தெரிவித்துள்ளார்.


வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க


...டாரநாயக்காவை கோரியுள்ளது.

## தேநீருக்குப் பதில் ஆவரசுப் பானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மிகவும் சுவையான ஆவரசுப்பானம்' கிளிநொச்சி இராமநாதபுரம், பரந்தன் கரடிப்போக்கு முதலிய இடங்களில் தேநீர் கடைகளில் கொடுக்கின்றார்கள்

நறுமணம் கமழும்பொன் ஆவரசுப் பட்டை, காட்டாவரசுப் பட்டை, பூ, இலை வேர், முதலியன இடித்துத் தூளாக்கி நன்றாரி வேரும் கலந்து தேநீருக்குப் பதில் பலர் அருந்துகின்றார்கள்.

கருப்பட்டி பனங்கட்டித் துண்டுடன் 5 சதத்துக்குஒரு பேணி ஆவரசுப் பானம் கிடைக்கும்படி தேநீர்க் கடைக்காரர் ஒழுங்கு செய்துள்ளனர்.

பல நோய்களையும் சுகப்படுத்தும் இந்த மூலிகைக் குடிவகை நீரழிவு வியாதியாளருக்கு மிகவும் நல்லதென்று தேனீர்க்கடைவியாபாரிகள் விளம்பரம் செய்கின்றார்களாம்.

கொழும்பு போன்ற நகரங்களில் 'பொல்பலா' காலையில் குடித்து மகிழ்வோரைப்போல இங்கும் வயல் பண்ணைகளில் வேலை செய்வோர் மிகப் பிரியமாக இதைக் குடித்து வருகின்றார்கள்.

இப்பகுதி சித்தாயுள்வேத வைத்தியர்களே இதைப் பாவிக்கும் முறையை விளம்பரம் செய்துள்ளனர்.

(குவிம)

## எம், பிக்களின் மோதக அன்னதானம்

பருத்தித்துறை, சனி

உடுப்பிட்டி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு க, ஜெயக்கொடியும் பருத்தித்துறை உறுப்பினர் திரு க, துரைரத்தினமும் நேற்று முன்தினம்தத்தமக்குக் கிடைத்த வாக்குச் சீட்டுத் தொகையளவு மோதகம் பொலிகண்டி கந்த சாமி கோவிலில் அவித்து பொது மக்களிடையே விநியோகம் செய்தனர். ஆதரவாளர்கள் புடைசூழ வணக்கம் செலுத்திய இரு எம். பிக்களும் அங்கு தற்காலிகமாகத் தங்கியிருக்கும் ஈழத்துச் சித்தர் திருநாவுக்கரசு சுவாமிகளையும் தரிசித்து அவரது ஆசீர்வாதத்தையும் பெற்றுச் சென்றனர்.

ஆசிரியர் - பெற்றோர் சங்க போஷகரான இவர் இலங்கை நூற்றல் நெய்தல் ஆலையின் தலைவரும், யாழ். ஐக்கியசங்கத்தின் நிர்வாகக் குழு அங்கத்தவருமாவார்.

## தேநீர்க்கடைப் பிரவேசம்

உடுப்பிட்டி சனி

நெல்லியடிப்பட்டினசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தேநீர்க்கடைகளில் அமைதியான முறையில் தேநீர்க்கடைப் பிரவேசம் நடைபெற்றது உடுப்பிட்டித் தொகுதித் தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணியைச் சேர்ந்த திருவாளர்கள் தோரைத்தம்பி, செல்வராசா ஆகியோர் தலைமையில் இத்தேநீர்க்கடைப்பிரவேசம் நடைபெற்றது.

ஏராளமான தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் கலந்துகொண்ட இத் தேநீர் கடைப் பிரவேசம் வெற்றிகரமாக நடந்தது என்று காங்கிரஸ் வாலிப முன்னணி அறிவித்தது,

வடபகுதி

## விஞ்ஞான பொருட்காட்சி

பருத்தித்துறை, சனி

வடமாநிலப் பாடசாலைகளுக்கான விஞ்ஞானப் பொருட்காட்சி இம் மாதம் 13, 14, 15-ந் திகதிகளில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. கடந்த மாதம் நடக்கவிருந்த இப் பொருட்காட்சி தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. வடமாநில விஞ்ஞானக்கல்வி அதிகாரி திரு எம். அற்புதநாதன் இதற்கான ஒழுங்குகளைக்கவனித்து வருகிறார்.

## சபதம் நிறைவேறியது

வேலணை, சனி

தமிழரசுக்கட்சியின் தீவுப்பகுதி வேட்பாளர் பண்டிதர் கா பொ. இரத்தினத்தை ஆதரித்து நடத்தப்பட்டபிரசாரக் கூட்டத்தை நடத்திய பின்பு அதே மேடையை நீக்காமல் வைத்திருந்து அம்மேடையில் திரு. இரத்தினத்தின் தேர்தல் வெற்றி விழாவையும் நடத்துவோமென திரு. வி. எஸ். கனகரத்தினம் தலைமையில் இயங்கும் வேலணை வரவேற்புக்குழு தீர்மானித்த சபதத்தை நிறைவேற்றியது. நீக்கப்படாதிருந்த மேடையில் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரித்திரம் காணாத பயங்கரம்

# பெரு பூகம்பத்தில் மாண்டவர் தொகை 50 ஆயிரம்

## 5 லட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள்

லிமா, ஜூன் 6

பெரு நாட்டில் ஏற்பட்ட பூகம்பத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரம் என்று இப்பொழுது கணக்கெடுக்கப்பட்டுள்ளது

தலைநகர் லிமாவுக்கும் இதர நகரங்களுக்குமிடையில் இப்பொழுது தொடர்புகள் ஏற்பட்டுவிட்டதால் சேதங்களின் முழு அளவையும் கணக்கெடுக்கக்கூடியதாய் இருக்கின்றது.

இப்பொழுது கிடைக்கும் புதிய தகவல்களின்படி பெருவில் ஏற்பட்ட பூகம்பத்திற்கு பலியானவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்கவேண்டும் என்றும் 5 லட்சம் பேர் வரை வீடுகளை இழந்திருக்கிறார்கள் என்றும் தெரிகின்றது.

இடிபாடுகளிலும் மண்சரிவுகளிலும் புதையுண்டு கிடக்கும் ஏராளமான பிணங்களைத் தோண்டி எடுப்பதிலும், வீடு வாசல்களை இழந்துள்ளவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதிலும் மீட்பு சேவையாளர்கள் பெருமளவில் ஈடுபட்டிருக்கிறார்கள் பாதைகள் சீராக இல்லாமையால் மீட்புவேலைகளைத் துரிதமாக செயல்படுத்துவது கஷ்டமாய் இருக்கின்றது.

உலக சரித்திரத்திலேயே இதுவரை கண்டிராத அளவு மனித உயிர்களைப் பலி எடுத்திருக்கும் இந்த இயற்கை அழிவுகள் உலக மக்கள் அனைவரது அனுதாபத்தையும் ஈர்த்துள்ளன.

உலகநாடுகள் பலவற்றிலுமிருந்து பெரு அரசாங்கம் உதவிகள் கேட்டிருப்பதாக தெரிகின்றது.

அமெரிக்க அரசாங்கம் விமானம் தாங்கிக்கப்பல் ஒன்றை பெருவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றது இந்தக் கப்பலில்ஏராளமான ஹெலிகோப்டர்களும் அனுப்பப்பட்டுள்ளன. நிவாரண வேலைகளைத் துரிதமாகச் செய்வதற்கு ஹெலிகோப்டர்களே பெருவாரியாகத் தேவைப்படுவதாக பெரு அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது.

பூகம்பத்தில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக எட்டுநாள் தேசிய துக்கதினம் கொண்டாடும்படி பெரு மக்களை அரசாங்கம் கேட்டிருக்கின்றது.

பூகம்பத்தின் காரணமாக மலைப்பிரதேச நகரமான யுங்கே முற்றாக அழிந்திருக்கவேண்டுமென்று அதிகாரிகள் அஞ்சுகிறார்கள். இந்த நகரின் 30,000 குடிமக்களும் இறந்திருக்கவேண்டுமென்று அங்கு விமான மூலம் பார்வையிட்டவர்கள் தெரிவித்தார்கள். மலைகள் சரிந்து முழுநகரையே புதைத்து விட்டிருக்கின்றன மீட்புக் கோஷ்டிகள் இடிபாடுகள் நடந்துள்ள பகுதிகளுக்குப் போவது பெரிதும் சங்கடமாகவிருக்கின்றது. பூகம்பத்தைத் தொடர்ந்து வெள்ளப்பெருக்கும், நிலச்சரிவுகளும் ஏற்பட்டிருப்பதே காரணம்.

— —

### முதலியாரின் நன்றி

யாழ்ப்பாணம் ஞாயிறு

உண்மையான ஜனநாயக முறையில் தமது கொள்கைக்கும் திட்டங்களுக்கும் மட்டும் வாக்களித்து தம்மை ஆதரித்தவர்களுக்கு உடுவில் தொகுதியில் போட்டியிட்ட திரு. சி. முதலியார் நன்றி தெரிவித்து ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

### கோவா வீரர் விடுதலையாவார்

புதுடில்லி, ஜூன் 5

கோவாவின் சுதந்திரத்திற்காகப் போராடிய டாக்டர் டிலோ மாஸ்மாகரனஸ் விடுதலை செய்யப்பட இருக்கின்றார்.

இவர் தற்போது போர்த்துக்கள் நாட்டில் சிறையில் இருந்து வருகின்றார். இவரை விடுதலை செய்ய போர்த்துக்கேய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கேய அதிபர் கார்மோனாவின் 100-வது பிறந்ததினத்தை முன்னிட்டு மன்னிப்பு அளித்து விடுதலை செய்யப்படும் கைதிகளில் இவரும் ஒருவராக இடம் பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

— —

### கும்பாபிஷேகம்

பருத்தித்துறை, ஞாயிறு

ஒன்றரை லட்சம் ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்ட நெடியகாடு திருச்சிற்றம்பலவி நாயகர் கோவில் கும்பாபிஷேகம் இன்று அதிகாலை நடைபெறுகிறது. இதைத்தொடர்ந்து 40 நாட்களுக்கு விசேட பூஷைகள், அபிஷேகங்கள் அன்னதானங்கள் ஆகியன நடைபெறும்.

சில தினங்களுக்குமுன் கொடியேறிய பொலிகண்டி கந்தசாமி ஆலயத் திருவிழா தொடர்ந்து 15 நாட்கள் வரை நடைபெறும். இம்முறை உள்ளூர்க் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளே நடைபெறுமென்றும். தேர்த் திருவிழா இரவன்று 'வள்ளி திருமணம்' நாடகம் நடைபெறும். என்றும் அறிவிக்கப்பட்டது.

— —

### பாடசாலைகளில் திடீர் பரிசோதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வகுப்பு வாதத்திற்கு முற்றுப்புள்ளி வேண்டும்

புதுடில்லி, ஜூன், 6

வகுப்புவாத நடவடிக்கைகளுக்குமுற்றுபுள்ளிவைக்கும் மார்க்கங்கள் பற்றி மத்திய அரசு பரிசீலனைசெய்து வருவதாக பிரதமர் இந்திரா அறிவித்திருக்கின்றார்.

வகுப்புவாதக் கலவரங்கள் ஏற்படாமல் தடுக்குமாறு நாட்டின் சகல மாநில முதன் மந்திரிகளை பிரதமர் இந்திரா காந்தி கேட்டுள்ளார்.

பிரதமர் இந்திரா மாநில முதலமைச்சர்களுக்கு எழுதிய கடிதத்தில் வகுப்புவாதத்திற்கு இலக்காகும் பகுதியில் உடனடியாக பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும். திறமையான அதிகாரிகளை அப்பகுதிக்கு நியமிப்பதுடன் செலவைச் சமாளிக்க தண்டவரி விதிக்கலாம் என்று புதுடில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மகாநாட்டில் ஆராயப்பட்ட ஆலோசனைகள் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது: வகுப்புவாத இயக்கங்களுடன் தொடர்ப்பு வைத்திருக்கும் ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பத்திரிகைகளில் ஆத்திரமூட்டக் கூடிய வகையில் எழுதுபவர்கள்மீது நடவடிக்கை எடிக்க வேண்டும்.

வகுப்புவாதக்கலவரத்தை அடக்காமல் கடமையில் அசட்டையாக இருக்கும் அதிகாரிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வகுப்வாத ஸ்தாபனங்களைத் தடைசெய்யும் தீர்மானம் ஆராயப்பட்டு வருகின்றது.

— —

### பரத நாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாணம் [illegible] தம்பதிகளின் [illegible] செல்விகள் ரமணி, நளினி ஆ[illegible] இருவரின் பரதநாட்டிய அரங்[illegible]

## அப்பலோ-14 டிசம்பரில் சந்திரனுக்கு புறப்படும்?

கென்னடிமுனை, ஜூன் 6

அப்பலோ-14 டிசம்பர் மாதம் செலுத்தப்படுவதற்கான நாள் குறிக்கப்பட்டிருக்கின்றது. டிசம்பர் 3-ம் திகதி அப்பலோ-14 சந்திரனைநோக்கி செலுத்தப்படுமென்றுதெரிகின்றது.

அப்பலோ-13 இறங்குவதற்காகக் குறிக்கப்பட்டிருந்த இடத்துக்கு அருகாமையில் அப்பலோ- 14 வீரர்கள் இறங்குவார்கள்.

அப்பலோ-13 கலத்தின் ஒக்ஸிஜன் கொள் கலத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அந்தப்பிரயாணம் அரைகுறையாக முடிவுற்றது. இதனால் அப்பலோ-14 பயணமும் ஒத்திப்போடப்பட்டது. அப்பலோ-14 ஒக்ஸிஜன் கொள் கலத்தில் மாற்றம் செய்யப்படவேண்டும் என்றும் இதற்காக அப்பலோ-14 பயணத்தை ஒத்திப்போடப் படவேண்டும் என்றும் அதிகாரிகள் அறிவித்திருந்தனர்.

அப்பலோ-14ல் செய்யப்படும் திருத்தங்களில் ஒக்ஸிஜன் கொள் கலங்களிலிருந்து சிறுமின்விசிறிகளை அகற்றிவிடுவதும் ஒன்று. விண்வெளியில் எடையற்ற தன்மையில் கடும் குளிர்நிலையில் இருக்கும் திரவ ஒக்ஸிஜனை கிளறி விடுவதற்கு இந்தமின் விசிறிகள் பயன்பட்டன. மற்றும் மின் கோளாறுகள் ஏற்படாமல் தடுக்க சிலமாற்றங்கள்செய்யப்படும்.

அப்பலோ-14ல் ஏற்கனவே செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த வீரர்களே செல்லவிருக்கிறார்கள்.

கடற்படைக்காப்டன் ஆலன் பி. ஷெப்பர்ட், (விண் வெளிசென்ற முதல் அமெரிக்கர்) தலைமை விமானியாக விருப்பார். விமானப் படைமேஜர் ஸ்டுவர்ட் ஏ. ரூஸா, கட்டளைக் கல விமானி. கடற்படைக் கொமாண்டர் எட்கர் டி. மிச்செல்- நிலாவாகன விமானி.

இவர்கள் சந்திரனில் ஃபிராமாரா என்ற இடத்தில் இறங்குவார்கள். இந்த இடம் விஞ்ஞானிகளுக்குப் பெரிதும் அக்கறையுள்ள இடம். அங்குள்ள பாறைகள் அப்பலோ-11, அப்பலோ-12 வீரர்கள் இறங்கிய இடங்களின் கீழ் தளத்தில் கண்டவற்றைவிட மிகப்பழமையானவை என்று அவர்கள் கருதுகிறார்கள். இந்தப் பாறைகளுக்கு குறைந்தது 500 கோடி ஆண்டு வயது இருக்கவேண்டுமாம். எந்தச் சூரியனிலிருந்து அம்புலியும் பிற கோள்களும் வந்தனவோ அந்தச் சூரியனுக்கும் வயது 500 கோடி ஆண்டாகும் என்று இப்போதுமதிப்பிடப்படுகின்றது. அம்புலியில் மிக மிக ஆழத்திலிருந்து வெளியே எறியப்பட்ட பாறைகள்தான் ஃபிராமாரோவில் இருக்கின்றனவென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

### உலகின் கவனத்தை ஈர்க்கும் 'ஸோயுஸ்-9'

மாஸ்கோ, ஜூன்6

'ஸோயுஸ்-9' விண்கலப் பயணிகள் நடத்தும் வெற்றிகரமான விஞ்ஞான-தொழில்நுட்ப ஆய்வுகள்பல நாடுகளில் விஞ்ஞான கவனத்தை பெற்றிருப்பதுடன் உலகப் பத்திரிகைகளின் கவனத்தை ஈர்க்கும் மையமாகவும் உள்ளது.

மனிதர்களுடன் கூடிய செய்கோள்கள் பூமியிலுள்ள வளிமண்டலவியலாளர்களுக்கு வளிமண்டல தோற்றப்பாடுகளை ஆராய பாரிய வாய்ப்பை அளிக்கின்றன என்று ஜெ. ஐ.கு. வளிமண்டல நிலைய அதிபர் டபிள்யு. பெமே சொன்னார். விண்வெளியில் சோவியத் யூனியன்ஈட்டியுள்ளவெற்றி காலநிலையை முன்கூட்டியே அறியும் பல பிரச்னைகளுக்குத் தீர்வுகாண உதவுகின்றன என்றார்.

'ஸோயுஸ்-9' விண்கலத்தின்பிரயாணத்தை பொகும் அவதான நிலையம் தொடர்ந்து உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இதை இந்த அவதான நிலையத்தின் [illegible]

## "போட்லூயிஸ் சுதந்திரம்": இந்திராவுக்கு பட்டம்

போட்லூயிஸ், ஜூன் 6

மொறிசியஸ் தீவுக் குவிஜயம் செய்த பிரதமர் இந்திரா காந்திக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது. விமானநிலையத்தில் மொறிசியஸ் பிரதமர் சர்ராம்குலாம் உட்பட பலர் திருமதி இந்திராகாந்தியை வரவேற்றனர்.

திருமதி இந்திரா வரவேற்புக்கு பதிலளிக்கையில் "நான் இங்கு நட்பு முறையில் வந்திருக்கின்றேன். இருநாடுகளுக்குமிடையில் பல ஒற்றுமைகள் உண்டு. இரண்டு நாடுகளும் வளரும் நிலையில் உள்ளநாடு அதாவது மக்களின் நிலையை மேம்படுத்தவேண்டிய நாடுகள் ஆகவே பொருளாதார சமுதாய ஒத்துழைப்பு இருநாட்டிற்கும் அவசியம்" என்றார்.

மொறிசியஸ் பிரதமர் குலாம்பேசுகையில் பிரதமர் இந்திராவின் விஜயம் இருநாட்டின் உறவை மேலும் பலப்படுத்தி உள்ளது. மொறிசியஸ் மக்கள் பலருக்கு மூதாதையர் நாடு இந்தியா ஆகவே இந்நாட்டு மக்கள் இந்தியாவின் முன்னேற்றம், நட்பு, சுபீட்சம் ஆகியவற்றில் அக்கறை கொண்டவர்கள் என்றார்

மொறிசியஸ் நாட்டுமக்களில் 68 விகிதமானோர் இந்திய வம்சாவழியினராகும். [illegible] மொறிசியஸுக்கும் வேற்றுமை கிடையாது. இத்தீவின் 8 லட்சம் மக்கள் (50 விகிதம்) இந்துக்களாகும்

போட்லூயிஸ் நகரமேயர் பிரதமர் இந்திரா காந்திக்கு அளித்த பொதுவரவேற்பில் போட்லூயில் சுதந்திரம என்றபட்டத்தைக் கொடுத்தார். போட்டிலூயிஸ் நகரத்தின் ஒரு வீதிக்கு ஜவகர்லால் நேரு வீதி என பெயரிடப்பட்டது.

— —

### "தெய்வத்தீ சுடாது"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தீகுளிப்பதை கேலி செய்பவரும் உளர். ஆனால் கீழைத்தேயத்து தமிழர் தம் பக்தி வைராக்கிய பிடிவாத காரணம் தீயில் இறங்குகின்றார்கள் தெய்வத்தீசுடாது" இவ்வாறு வாணன் புலமுருகன் ஆலயபக்தன் ஸ்ரீகுமாரசுவாமி, கந்தபுராணசூரன் போர்விழாவில் "தீகுளிப்பு" செய்து கூறினார்.

சுமார் 12பேர் தீகுளித்தார்கள். சூரன்போர்விழா விமரிசையாக, காவடி, விசேட பூஜை ஆராதனை, அபிஷேகங்களுடன் நடைபெற்றது. வித்துவான் ஆறுமுகம், மேற்படி கோவில் முகாமையாளர் வை. சுப்பிரமணியம் உட்படபலர் [illegible]

## கூட்டரசாங்க அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள இலாகாக்கள்

கோட்டை, சனி

கூட்டரசாங்கத்தின் இரு [illegible] தொழில் அமைச்சர் (திரு மைக்கல் சிறிவர்த்தன: [illegible] புப்பகுதி, கடன்சபை, கலால் மதிப்பீட்டு இலாகாக்கள் [illegible]

# பொறுப்பிலுள்ள இலாகாக்கள்

கோட்டை, சனி

கூட்டரசாங்கத்தின் இருபத்தொரு அமைச்சர்களுக்கும் பின்வருமாறு இலாகாக்கள் ஒது கப்பட்டுள்ளன.

பிரதமரும் உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பு மந்திரியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா: ராணுவம். விமானப்படை, கடற்படை, பொலிஸ் இலாகா, குடியேற்ற வெளியேற்ற இலாகா, பாகிஸ்தானிய பிரஜா உரிமைப் பதிவு இலாகா.

பொருளாதாரத் திட்டவேலை வசதி மந்திரி (திருமதி சிறிமாவோ பண்டாரநாயகர்): தேசியத் திட்டம், வெளிநாட்டு உதவி, திட்ட அமுல், புள்ளிவிபரச்சபை, பட்டதாரிகள் தொழில் தேசியஇளைஞர் சபை காண் கவுன்ஸில்.

நீர்ப்பாசன, மின்சார நெடுந்தூரப் பாதைகள் அமைச்சர் (திரு மைத்திரிபால சேனநாயகா): நீர்ப்பாசன இலாகா, மின்சார சபை. நெடுந்தூரப் பாதைகள், அரசாங்கத் தொழிற்சாலைகள், பகிரங்கவேலைப் பகுதி, ஆராய்ச்சிக் கழகம், நீர்விநியோக வடிகால்த் திட்ட இலாகா, காணி அபிவிருத்தி ஆற்றுப்பள்ளத் தாக்கு சபை, கண்டிய விவசாயிகள் கமிஷன்.

வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக மந்திரி (திரு ரி. பி. இலங்கரத்தின): வர்த்தகம் கம்பனிகள் பதிவு, தேயிலை ஏற்றுமதி, அரசாங்க விநியோக இலாகா, கொள்வனவுப்பகுதி, ஏற்றுமதி இறக்குமதி இலாகா, கொன்ஸலிடேட்ட (ஏற்றுமதி) கம்பெனி, கூ. மொ. வி. ஸ்தாபனம். லங்கா சலுசல விற்பனவு இலாகா, உணவு இலாகா கூட்டுறவு அபிவிருத்திப்பகுதி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.

கல்வி அமைச்சர் (டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத்) பிரதேசக் கல்வி இலாகாக்கள் யுனெஸ்கோ ஸ்தாபனம் பரீட்சை இலாகா, பாடநூற் பிரசுர இலாகாவும் சபையும்.

கப்பல்போக்குவரத்துஉல்லாசப்பயண அமைச்சர் (திரு பி, பீ, ஜி கலுகல்லே): வர்த்தக கப்பல் போக்குவரத்து இலாகா, துறைமுகக் கூட்டுத்தாபனம். துறைமுக ஆணைக்குழு. இலங்கை உல்லாசப்பயணச் சபை, இலங்கை கப்பல்கூட்டுத்தாபனம். வனவிலங்கு பரிபாலன இலாகா.

தொழில் அமைச்சர் (திரு மைக்கல் சிறிவர்த்தன): தொழில் இலாகா.

உள்ளூராட்சி, பொதுநிர்வாகம், உள்நாட்டு மந்திரி (திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா): அரசாங்க சேவை. சேமலாபநிதி, ஆசிரியர்கள், கைம்பெண்-அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதி, உத்தியோக மொழித்திணைக்களம், உள்ளூராட்சி இலாகா, நகர அமைப்புத்திட்ட இலாகா பிரதம பதிவாளர் இலாகா, கிராம அபிவிருத்திப் பகுதி, உள்ளூராட்சிச்சேவை ஆணைக்குழு, கச்சேரிகள், அனுராதபுரம் பாதுகாப்புச் சபை.

கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி விவகார அமைச்சர் (திரு ரி. பி. சுபசிங்கா) கைத்தொழில் இலாகா, உப்பு இலாகா, கைத்தொழில் அபிவிருத்திச்சபை தேசிய ஜவுளிக்கூட்டுத்தாபனம், இலங்கை எண்ணைக் கொழுப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை கனிப்பொருட்கூட்டுத்தாபனம், சிமெந்துக் கூட்டுத்தாபனம், கிழக்கிலங்கைக் கடுதாசி ஆலைக்கூட்டுத்தாபனம், உருக்குக் கூட்டுத்தாபனம், தோற்பொருள் உற்பத்திக் கூட்டுத்தாபனம், அரசாங்க இரும்புக்கூட்டுத்தாபனம், மா ஆலைக் கூட்டுத்தாபனம், ரயர் கூட்டுஸ்தாபனம், கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம், பசளைக்கூட்டுஸ்தாபனம், அரசாங்க பசளை உற்பத்திக் கூட்டுஸ்தாபனம் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் தேசிய விஞ்ஞான ஆராய்ச்சிச்சபை, வானிலை ஆராய்ச்சி இலாகா, இலங்கைத்தரநிர்ணய பணியகம்

போக்குவரத்து அமைச்சர்(திரு லெஸ்லி குணவர்த்தன): புகையிரதப்பகுதி, இ.போ.ச.மோட்டார்ப் போக்குவரத்து இலாகா, ஏயர் சிலோன் விமானப் போக்குவரத்து இலாகா

தோட்டக்கைத் தொழில் மந்திரி டாக்டர் கொல்வின் ஆர் டி.சில்வா): தேயிலை ஆராய்ச்சிக்கழகம், றப்பர், தெங்குப்பொருள் ஆராய்ச்சிக்கழகங்கள், தேயிலைக்கட்டுப்பாட்டிலாகா, றப்பர் கட்டுப்பாட்டிலாகா, தெங்குச்சபை, தென்னந்தும்புச் சபை, தேயிலைப்பிரசார சபை.

நிதி அமைச்சர் (டாக்டர் என். எம். பெரேரா): திறைசேரி, வருமானவரிஇலாகா, சுங்கப்பகுதி, தேசியசேமிப்புப்பகுதி, கடன்சபை, கலால் மதிப்பீட்டு இலாகாக்கள்.

நீதிமந்திரி (திரு ஜே.எம். ஜெயமான்ன): அட்டோர்ணி ஜெனரல் இலாகா, சட்டத்தயாரிப்பு இலாகா, உயர் நீதிமன்றப் பதிவாளர் இலாகா, பிஸ்கால் இலாகா, மாவட்ட மாஜிஸ்டிரேட், கிராம நீதிமன்றங்கள், லஞ்சக்கமிஷனர் இலாகா, சிறைச்சாலைப்பகுதி, பகிரங்க நம்பிக்கையாளர் பகுதி, பள்ளிவாசல், முஸ்லிம் தரும நம்பிக்கைச் சொத்துப்பகுதி அரசாங்கரசாயன பரிசோதனைப்பகுதி, கடன் இணக்க இலாகா.

காணி விவசாயமந்திரி (திரு, ஹெக்டர் கொப்பேகடுவ): விவசாய இலாகா விவசாய சேவைகள் இலாகா, காணிக்கமிஷனர் இலாகா, காணிக்குடியேற்ற இலாகா நிலஅளவைப்பகுதி வன இலாகா, கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனம், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், தேசிய பால்சபை.

மீன்பிடிமந்திரி (திரு' ஜோர்ஜ் ராஜபக்ஸ): மீன்பிடி இலாகா, மீன்பிடிக் கூட்டுத்தாபனம்.

வீடமைப்பு, கட்டிடவேலை மந்திரி (திரு. பீட்டர்கெனமன்): தேசிய வீடமைப்புப் பகுதி, கட்டிட இலாகா. இலங்கைப் பொறிஇயல் கூட்டுத்தாபனம்.

தபால் தந்தித் தொடர்பு மந்திரி (திரு.குமாரசூரியர்): தபால், தந்தித் தொடர்பு இலாகா.

சுகாதர அமைச்சர் (திரு டபிள்யூ பி.ஜி. ஆரியதாஸ): சுகாதர இலாகா, ஆயுர்வேத இலாகா

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் (திரு ஆர். எஸ் பெரேரா): தகவல் இலாகா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்,

சமூகசேவைகள் மந்திரி (திரு. டி. பி. தென்னக்கூன்): சமூகசேவைகள் இலாகா, சிறுவர் பராமரிப்பு, நன்னடத்தைச் சேவைகள் இலாகா.

கலாச்சாரமந்திரி (திரு. எஸ். எஸ். குலத்திலகா): கலாச்சாரஇலாகா, தேசிய நூதனசாலை, புதைபொருள் ஆராய்ச்சி இலாகா, தேசியக் கட்டடத் திணைக்களம்.

ஆட்சிமன்ற விவகார மந்திரி (திரு, கே. பி. இரத்நாயக்கா): ஆட்சிமன்றச் செயல் விவகாரங்கள், விளையாட்டுத்துறை.

றும். என்றும் அறிவிக்கப் பட்டது.

— —

## பாடசாலைகளில் திடீர் பரிசோதனை

பருத்தித்துறை, சனி

தேர்தல் காலங்களில் பல ஆசிரியர்கள் அரசியலில் மறைமுகமாகவும் நேரடியாகவும் ஈடுபட்டிருந்தனரெனப் பெற்றோரும், பொது நிறுவனங்களும் முறையிட்டதன் காரணமாக கல்விப்பகுதி 'திடீர்' பரிசோதனைக் குழுக்களை பாடசாலைகளுக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது. மேலும் தேர்தல் வேலைகளில் ஈடுபட்ட சில ஆசிரியர்கள் விடயமாகவும் முறைப்பாடுகள் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

— —

## பிரதமருக்கு பாராட்டு

உடுப்பிட்டி, சனி

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவி யேற்றதைப் பாராட்டிக் கரணவாய் தெற்கு முதலைக்குளி சர்வோதய ஐக்கிய சங்கம் வாழ்த்துத் தந்தி அனுப்பிவைத்துள்ளது.

அத்தந்தியில் ''சிறுபான்மைச் சமூக மக்களுக்கு ஒளிமயமான காலம் தோன்றிவிட்டது உங்கள் ஆட்சியில் நாம் விமோசனம் பெறப் போகிறோம்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாணம் அரசரத்தினம் தம்பதிகளின் புதல்விகள் செல்விகள் ரமணி, நளினி ஆ[கிய] இருவரின் பரதநாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 10-ம் திகதிநடைபெறவிருக்கிறது. இவர்கள் சதங்கை நர்த்தனாலய அதிபர் செல்வி லீலா நாராயணனின் மாணவிகளாவர்.

'ஸோயுஸ்-9' விண்கலத்தின்பிரயாணத்தை பொகும் அவதான நிலையம் தொடர்ந்து உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இதை இந்த அவதான நிலையத்தின் டைரக்டர் ஜி. கமிஷஸ்கி தெரிவித்தார். இந்த அவதான நிலைய அதிகாரிகள் விண்கலத்தை அவதானித்ததுடன் கட9த இரவு பல நிழற்படங்களையும் எடுத்தனர்.

### குருடர்களுக்கு

## பார்வையளிக்கும் அதிசய மூக்குக்கண்ணாடி

லண்டன், ஜூன். 6

பார்வையிழந்த குருடர்கள் தங்கள் சுற்றுடலை உணர்ந்துகொள்ளக் கூடிய அதிசய மூக்குக்கண்ணாடி ஒன்றை பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானியாகிய பேராசியர் லெஸ்லி கேய் கண்டு பிடித்துள்ளார். ஒலியலை அதிர்வுகள் மூலம் சூழலை உணர்ந்தறியச் செய்துவிடுகிறது இம்மூக்குக் கண்ணாடி.

இந்தமூக்குக்கண்ணாடியின் அபார சக்திபற்றி அண்மையில் விளக்கப்பட்டது. அப்போது இக்கண்ணாடியை அணிந்து கொண்ட குருடர் ஒருவர் வாகன நெருக்கடி மிகுந்த லண்டன்வீதியொன்றில் அங்குமிங்கும் சர்வசாதாரணமாக நடமாடித் திரிந்தார். ''கப்பலிலுள்ள ஒலியதிர்வு சாதனம் போன்றதுதான் இந்தக் கண்ணாடி சூழலிலுள்ள இடையூறுகளை ஒலியலைகள் வாயிலாக உணர்ந்து கொள்ள முடிகிறது என்று அக்குருடர் தெரிவித்தார்.

இதுசாதாரண மூக்குக் கண்ணாடி போன்றது. கண்ணாடியின் முன்புறச் சட்டத்தின் மீதாக மூன்றுவட்டமான ஒலியீர்ப்புத் தட்டுகள் பொருத்தப்பட்டிருக்கின்றன இவை ஒலியலைகளை ஈர்த்து, சூழலை உணர்த்தும் சக்தியுடையவை.

இந்த ஒலியீர்ப்புக் கருவிகள் கதழ் ஒலி அலைகளை (அல்ரா சோனிக்) கேள்விப் புலன் மூலம் உணரக்கூடிய சமிக்கைகளாக மாற்றிவிடுகிறது. இதனால் இதனை மாட்டிக் கொள்ளும் குருடர்கள் தங்களுக்கு முன்பாக உள்ள தடைகளை. பொருட்களை கிரகித்துக்கொள்ளமுடியும்.

னேற்றம், நட்பு, சுபீட்சம் ஆகியவற்றில் அக்கறை கொண்டவர்கள் என்றார் மொறிசியஸ் நாட்டுமக்களில் 68 விகிதமானோர் இந்திய வம்சாவழியினராகும். பண்பாட்டைப் பொறுத்து இந்தியாவிற்கும்

## கார் இல்லாமல் காரோட்டப் பழகலாம்

லண்டன், ஜூன் 6

காரில் பயிற்சிபெறாமல் காரோட்டப் பழகிக்கொடுக்கும் புரட்சிகரமான முறை ஒன்று இப்பொழுது பிரிட்டனில் கையாளப்பட்டுவருகிறது. இந்த முறையின் கீழ் ஐந்து ஆண்டுகளுக்குள் 400,000 பேர் பிரிட்டனில் காரோட்டப் பழகிக்கொள்ளமுடியுமென நிபுணர்கள் கூறுகிறார்கள்.

லண்டனிலுள்ள மோட்டார் சாரதி பயிற்சியாளர் ஸ்தாபனம் ஒரு விசேஷ பயிற்சி கூடத்தை அமைத்துள்ளது. இங்கு காரிலுள்ளது போன்று ஆசனமும், இயக்குகருவிகளும்உள்ளன. பயிற்சியாளர் ஒருவர் இந்த சாரதி ஆசனத்தில் அமர்ந்துகொண்டு இயக்குபொறிகளை கையாளப் பழகிக் கொள்ளலாம். அதேசமயம் அவருக்கு முன்பாக திரையொன்றில் படக்காட்சி போன்று எதிரே வீதியில் வாகன நடமாட்டங்கள், போக்குவரத்து சமிக்ஞைகள் யாவும் காண்பிக்கப்படும் எனவே பயிற்சியாளர்கள் வீதியில் எவ்விதம் காரோட்டிச்செல்ல வேண்டுமென்பதை செம்மையாகப் பயின்றுகொள்கிறார்கள். இப்பயிற்சி இடத்தில் 18 நேரப் பயிற்சிபெற்றால் பயிற்சியாளர் எவரும் எந்த வாகனத்தையும் துணிவுடன் கையாளும் ஆற்றலைப் பெற்றுவிடுகிறார்.

—

## பிஸ்கட்டுக்கு பதில் | பணிஸ்!

கோட்டை, சனி

பாடசாலைகளுக்கு மதிய போசனமாகக் கொடுக்கப்படும் 'பிஸ்கட்டு'க்களை நிறுத்தி மீண்டும் 'பனிஸ்' கொடுக்கப்படுமென கல்வி மந்திரி ஜனாப் பதியுதீன் மஹ்முத் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகள் 'பிஸ்கட்டு'க்களை விரும்பிச் சாப்பிடுவதில்லையென அதிகமான ஆசிரியர்கள் அமைச்சுக்குப் புகார் செய்ததன்மூலம் இந் நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

விமரிசையாக, காவடி, விசேட பூஜை ஆராதனை, அபிஷேகங்களுடன் நடைபெற்றது. வித்துவான் ஆறுமுகம், மேற்படி கோவில் முகாமையாளர் வை. சுப்பிரமணியம் உட்படப்பலர் புராண பாராயணத்தில் பங்கு கொண்டார்கள்.

(கு. வி. ம)

—

## ஆயுள்வேத டாக்டர் பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

''நன்றி மறப்பது நன்றன்று'' என்ற திருக்குறள் மணிவாக்குப்படி நாம் கூட்டு முன்னணித் தலைவி பிரதமர் ஸ்ரீமா பண்டாநாயகாவை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவ்வாறு நன்றி நவிலல் கடிதமொன்றை பிரபல ஆயுள்வேத வைத்தியர்டாக்டர் எம். குழந்தைவேலு இலங்கைப்பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

ஆயுள்வேத சகாப்தத்தில் புத்துயிர் கொடுத்து மறுமலர்ச்சியடையச் செய்தது தங்கள்கணவரது ஆட்சிகால

சித்த ஆயுள்வேத வைத்தியர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கொடுத்தது. ஏற்ற சம்பளமும் தருவதாக ஒழுங்கு செய்துள்ளதோடு சனப்பெருக்கத்துடன் பலவித வியாதிகளும் தோன்றும் இவ்வேளை சுதேச வைத்தியத்துறை வளரஆவன செய்துள்ளார். தாங்கள் கோன்முறையரசு செய்து குறைவிலாதுயிர்கள் வாழப் பணி புரியப் பாராட்டுகின்றோம்.

(கு. வி. ம.)

— —

## காணிக்கச்சேரி நடந்தது; ஆனால்...

யாழ்ப்பாணம், ஞாயிறு

வவுனியா மாவட்டத்தில் நயினாமடு மேட்டு நில [மத்திய வகுப்புத் திட்டம்] காணிக்கச்சேரி நடந்தும் காணி கொடுபடவில்லையாம். தோடை, எலுமிச்சை, வாழை, பலா, மா போன்ற பயிர்களை அங்கு பயிரிட வாய்ப்பான செம்மண் வளம் இருப்பது என்றே பலர் காணிபெற விண்ணப்பம் செய்திருந்தனர். சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பு வவுனியாக் கச்சேரியில் இதற்கான காணிக் கச்சேரியும் நடைபெற்றதாகவும், அதன் முடிவு இதுவரை இல்லையென்றும் கவலைதெரிவிக்கின்றனர்.

[கு வி ம]

### இந்தோ சீனா - மேற்காஸியா

# நெருக்கடிகள் குறித்து பிரான்ஸ் - ரஷ்யா கவலை

பாரிஸ், ஜூன். 6

இந்தோசீனாவிலும் மேற்கு ஆஸியாவிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்து பிரான்ஸும் சோவியத் யூனியனும் பெருங் கவலை தெரிவித்துள்ளன.

சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு குரோமிக்கோவின் பிரான்ஸ் விஜயத்தைத்தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இரு நாடுகளும் இந்தக் கவலையைத் தெரிவித்துள்ளன.

இந்தோசீன மக்கள் தம் எதிர்காலத்தை தாமே முடிவுசெய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென்பதை இரு நாடுகளுமே ஒப்புக்கொண்டுள்ளன.

மேற்காஸியா பற்றிய ஐ. நா. தீர்மானங்களைச் செயல் படுத்துவதற்கு சோவியத் யூனியன் தயாராய் இருக்கின்றது என்று திரு குரோமிக்கோவ் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

கம்போடிய தலைநகரான நாம் பென்னுக்கு சுமார் பத்துமைல் அருகாமையில் இப்பொழுது பலத்த சண்டை நடைபெறுவதாக செய்திகள் கூறுகின்றன.

பதவிநீக்கம் செய்யப்பட்ட கம்போடிய தலைவர் இளவரசர் சிகானுவுக்கு ஆதரவான படைகள் முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் கம்போடியாவின் தற்போதைய அரசின் படைகள் தலைநகருக்குப் பின்வாங்கியிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

எதிரி படைகளை முறியடிப்பதற்கு விமான உதவிகள் புரியும்படி கம்போடிய அரசு தென்வியட்நாமுக்கு வேண்டுகோள் விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாம் கிணற்றுத்தவளைகளைப் போல வாழக்கூடாது. நமக்கு வெளியிலுள்ள உலகத்தையும் அவதானித்து வாழவேண்டும்.
— ராஜாஜி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49. Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 24-ந் திகதி (7-6-70)


## நிதி அமைச்சரின் வேண்டுகோள்

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இலங்கை வானொலி மூலம் ஒரு முக்கிய வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இலங்கை அரசாங்கத்தின் பணநிலைமை மிக மோசமாக இருப்பதாகவும், சிக்கனத்தைக் கையாளவேண்டியிருப்பதுடன், பொதுமக்களும் உல்லாசப் பயணம், யாத்திரை முதலியவற்றை ஒத்திப்போடும்படியும் கேட்டுக்கொண்டிருக்கின்றார். அவரது இந்த வேண்டுகோளுக்குப் பொதுமக்கள் பூரணமாகச் செவிசாய்த்து ஒத்துழைப்பரென்றே நம்புகிறோம்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இரண்டுகொத்து அரிசி பங்கீடாகக் கொடுப்பதாக கூட்டணிக் கட்சியினர் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதி கூறியிருந்தனர். இன்னும் சென்ற அரசாங்கம் வேலையிலிருந்து நீக்கியிருந்த சிப்பந்திகளை மீண்டும் வேலைக்கு நியமித்து, பழைய சம்பளங்களைச் சேர்த்துக் கொடுக்கவேண்டியுள்ளது. ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளருக்கு இரண்டுவேளை சோறு அளிப்பதென்றும் தெரிவித்துள்ளனர். இன்னும் பலப்பல காரியங்களை நிறைவேற்றுவதாகவும் உறுதி கூறியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நிறைவேற்றிவைக்க செலவு அதிகமாகும். ஆனால் திறைசேரி காலியாகக் கிடப்பதாயின் இச் செலவுகளனைத்தையும் எப்படிச்செய்ய முடியும்? புதிய வரிகளை விதிக்கவேண்டியிருக்குமென்றும் அமைச்சர் கூறியிருக்கிறார். எப்படியும், புதிய அரசாங்கம் தேர்தல் காலத்தில் அளித்த உறுதிமொழிகளையெல்லாம் உடனடியாக நிறைவேற்றிவைக்கமுடியுமா என்பது சந்தேகம்.

இலங்கையின் பணக் கஷ்டத்துக்கு முக்கியமான காரணம், நமது ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, ரப்பர், தெங்குப்பொருட்கள் இவற்றின் விலைகள் உலக மார்க்கெட்டில் குறைக்கப்படுவதுதான். சில வல்லரசுகள், தங்கள் இஷ்டம்போல் இவ் விலைகளை குறைக்கக்கூடிய நிலையில் இருப்பதால் இலங்கையின் பொருளாதாரம்ஸ்திரமின்றியும், நாடும் முன்னேற முடியாமலுள்ளது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும், அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் பலவும் தங்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துள்ளதை, காரியத்தில் காட்டினால், நமது விளைபொருள்களுக்கு நியாயமான விலை அளிக்க முன்வந்தால், நமது பணச் சங்கடங்களெல்லாம் பெரிதும் குறைவதாக இருக்கும். ஆனால் வல்லரசுகள் உண்மையில் அனுதாபத்துடன் நடந்துகொள்ளுமா என்பது இனித்தான் தெரியவேண்டும். பழைய அனுபவங்களை நினைத்துப் பார்க்கையில் நாம் இவ்விஷயமாக அதிக நம்பிக்கை கொள்வதற்கில்லை.

ஆகவே இலங்கைப் பொதுமக்கள் நன்கு உழைப்பதுடன், தங்கள் செலவுகளையும் குறைத்துக்கொண்டு கூடுமானவரை சிக்கனமாக வாழ்வதில்தான், பொருளாதாரமும் மேம்பட முடிவதாக இருக்கும். அரசாங்கத்தின் மூலம் விசேஷ சலுகைகளை உடனடியாக எதிர்பார்ப்பதற்கில்லை.

## நல்ல அறிகுறி

இலங்கைப் பிரஜைகள் யாரும் இந்தியாவுக்குச் செல்வதாயின் இந்

போர்ட்டுகளை அனுப்பிவைத்து இந்திய ஹைகமிஷனிடம் கட்டணம்

# சேக்கிழார் பெண்மையில் கண்ட தெய்வீக ஒளி!

**அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தினர் நாளை சேக்கிழாருக்கு யாழ்ப்பாணத்தில் விழா எடுக்கின்றனர். இதனை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

சிவநெறியும் செந்தமிழ் நெறியும் தழைக்கப் பிறந்தவர் சேக்கிழார் பெருமான் என்றால் அதில் மிகையொன்றுமில்லை. இவரின் உள்ளம் மூவர் திருமுறைகளோடு தோய்ந்தது. தெய்வீகக் கண்ணோட்டத்தோடு நின்று எந்த நிகழ்ச்சிகளையும் தெளிவுபடுத்தியுள்ளார் சங்கத் தமிழிலும் திருக்குறளிலும் இவருக்கிருந்த ஈடுபாட்டை நூல் முழுவதிலும் பரக்கக்காணலாம். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள், சிலம்பு, மணிமேகலை யாவும் பெண்ணின் பெருமையைப்பற்றியும், பெண்மைப் பண்பைப்பற்றியும் அதிகமாகப் பேசியிருக்கின்றதை நாமறிவோம். ஆனால் சேக்கிழார் காட்டிய பெண்மை மேலும் ஒரு ஒளி விடுகிறது. அதுதான் தெய்வீக ஒளி. அந்த ஒளியையும் கூட ஊட்டிப் பெண்மையை ஆங்காங்கு சிறப்பித்துள்ளார் சேக்கிழார்.

''கண்ணால் காணும்போது தோன்றும் சாந்தமான தோற்றத்தின் இயல்பே பெண்மை யென்று பெண்ணுக்கு உரைவிரிக்கிறார் நச்சினார்க்கினியர். ஆனால்சேக்கிழார் பெருமானோ பெரிய புராணத்தில் பெண்மைக்கு பெரும்பங்கு கொடுத்துள்ளார். ''திருவினும் பெரியாள்'' என்றும் ''தூண்டுதவவிளக்கு'' என்றும் ''நம்மைப் பேணும் அம்மை'' என்றும் ''தெய்வப்பாவை'' என்றும் 'மனையறத்தின் வேரனையார்'' என்றும் போற்றிய இடங்களை நாம் காண்கிறோம். பெரியபுராணத்தில் இடம்பெற்ற அடியார்களின் தவவாழ்வுக்கெல்லாம் பெண்களே சிறந்த வழிகாட்டிகளாக இருந்திருக்கிறார்கள். சிறந்த ஞானப்பனுவல்களை இயற்றி, இறைவன் அடியின்கீழ் இருக்க வேண்டும் என்று வரம் பெற்ற காரைக்காற் பேயரையும், அம் பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி வாழ்ந்த திலகவதியாரையும், தமிழ் நாடு உற்ற இடரை நீக்கி திருநீற்றின் ஒளியை அந் நாடெங்கும் பரப்பிய மங்கையர்க்கரசியாரையும் சைவ உலகம் மறக்கமுடியுமா?

சேக்கிழார்காட்டிய பெண்

ந்து பின்பற்றவேண்டியதாகும். பரமதத்தன் அம்மையாருடைய தெய்வீகப் பண்பினைப் போற்றி மானுடம் இவர் தாமல்லர் நற்பெருந் தெய்வமாதல் நான நிந்தகன்ற பின்பு பெற்ற இம்மகவு தன்னைப் பெயரிட்டேன் எனக் கூறுகிறான். கணவன் நீங்கியபின் பிரபஞ்சச் சார்பைவெறுத்து, சிவச்சார்பை விரும்பி சிவகணங்களுள் ஒன்றும் பேய்வடிவைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு

''அண்டர் நாயகனார் என்னை அறிவரேல் அறியா வாய்மை, எண்டிசைமாக்களுக்கு யான் எவ்வுருவாயென்'' என்பர்.

அம்மையாரின் உறுதிப்பாடும் ஊன்றிய பக்தியும் சேர்ந்து அம்மையே என்ற ஒரு மொழியால் எம்பெருமான் அழைக்கும் பெரும் பேற்றை யளித்தது என்றால் சைவப் பெண்ணுலகம் பெருமையடையவேண்டாமா?

''மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்'' என்று போற்றப்பட்டவர் பாண்டிமாதேவியார். ஏழாவது நூற்றாண்டிலே மங்கையர்க்கரசியார் செய்த சேவை பெண்ணினத்துக்கே பெருமை தருவதாகும். தெய்வம் என்று போற்றப்படும் பேற்றை எல்லோரும் அடைந்துவிட முடியாது. சாதாரணமாக ஒரு பெண்ணுக்குப் பல கடமைகள் உண்டு. கணவனைப்பேணல் விருந்தோம்பல் கணவன் கற்பித்தவழி நிற்றல் ஆகிய அளவோடு மாத்திரம் நின்றால் அவள் ஒரு பெண். இந்த நிலையில் நின்றும் உயர்ந்தால் அது தெய்வ நிலையாகும். மனிதப் பண்பைக் கடந்த நிலைதான் தெய்வநிலை. மங்கையர்க்கரசியார் கணவன் வழியில் மாறாது நின்று ஒழுகினால் அது மனிதப்பண்பு என்று மாத்திரம் போற்றற் குரியது. ஆனால் அவர் தன் கணவன் நின்ற நெறி பிழையெனக் கொண்டு சைவத்திலேயே நின்றுஅதன் மூலமாகப் பாண்டி நாட்டிலே மண்டிய சமண இருளைப் போக்கடித்தார். இச்செயலை நோக்கியே சேக்கிழார் பெருமான் தெய்வமெனப் போற்றுகிறார். அம்மையாருடைய தலைமையிலேதான் அமைச்சர் ஆகவேண்டியதைச் செய்தார். அரசன் அறிவுடையவனாயிருந்தும் அம்மையாரின் பக்திக்கு முன் அது தோற்றுப் பின் வாங்குகிறது.

சாதாரணமாக நம்பெண்மக்கள் நாமுண்டு நம்வீடுண்டு என்று ஒதுங்கி வாழ்கிறார்கள். அம்மையார் அப்படி ஒதுங்கி வாழவில்லை. தன்னாற் கடைப்பிடிக்கப்பட்ட மதத்தை தன்னாட்டிலும் பரவ வழிவகுத்தார் பாண்டியன் ஒருவனுக்கேயல்ல. பாண்டிய பரம்பரைக்கே வழிவழியாகவர விருந்த பழியை மாற்றினார் நாட்டிலே மிகநெருக்கடியான சூழ்நிலையிலே அம்மையார் வாழ்ந்திருக்கிறார் எனினும்தளர்வின்றித் தன் பணியைஆற்றிதனக்கும்தன் பதிக்கும் தன்னாட்டிற்கும் உய்வு தேடித்தந்த அரசியாரைச் சேக்கிழார் பெருமான் மங்கையர்க்குத் தனியரசி என்று கூறுவதில்வியப்பொன்றுமில்லையே.

அடுத்து, திலகவதியாரின் மாண்பினைக் காண்போம். தம்பியார் உளராக வேண்டும் என வைத்ததயவு உலகத்துக்கே வைத்த தயவாகி விட்டது. ''தூண்டுதவ விளக்கு'' எனக் குறிப்பிட்டமை சிந்தித்தற்குரியது. மற்றொருவரைச் சைவத்திற்கு தூண்டிவிட்ட விளக்கு இது. அப்பரை எமக்குத் தந்தவர் இவரே அடியேன் பின் வந்தவனை ஈண்டு வினைப்பராமயக் குழியினின்றும் எடுத்தாள வேண்டும் என வேண்டினார். வெற்றி பெற்றார். பெண்களால் ஆகாதது எதுவுமேயில்லை. பெற்றோரையும் கணவனையும் இழந்து நின்ற ஒரு அனாதைப் பெண் இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன் ஆற்றிய சேவை இது. கணவன் இறந்து விட்டான் என்று கைமை நோன்பை நோற்று ஒதுங்கியிருந்தால் இன்று திலகவதியார் என்றோ. நாவுக்கரசரென்றோ பேச்செழ இடமில்லை எனவே இயன்ற அளவில் பழைய கொள்கைகளை தற்காலச் சூழலுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்க மாற்றியமைக்க வேண்டும்.

இன்னும் மகேசுர பூசைக்கு முட்டுப்பாடு வந்துற்றதே யெனக் கலங்கிய கணவருக்கு உறுதி கூறிநற்பணியாற்றி நல்விருந்தோம்பிய இளையான் குடியான் மனைவியையும் தன் கணவன் திறத்திற்கு மாறுபடாது ஒருப்பட்டு நின்ற இயற்பகைமனைவியையும்திருவெண்காட்டு நங்கையையும் மற்றும் பெரிய புராணப் பெண்கள்பலரையும் சைவப் பெண்ணுலகம் அறிந்து போற்றிப்பின் பற்றக்கடவர்.

சேக்கிழார் பெருமான் மகளிர்க்குப் பெருமை கொடுத்து, பெண்மையை போற்றுவதன்மூலம் தமிழ்ப்பண்பாட்டை உயர்த்துகிறார். அவர் செந்தமிழ் நாட்டின் ஒப்பற்ற முதற் கவிஞர். தெய்வீகக் கவிஞர் என்பது ஒருதலை.

பண்டிதை
செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி

இ. தொ. கா. விவ்விளவு?

# ஜெயாறன் எழுதுவது

கொழும்பிலிருந்து நேற்று ஒரு நண்பர் வந்தார். அங்கு ஏதாவது கலவரம் உண்டா? செட்டியார் தெருவில் ஏதோ நடந்ததாக வதந்தி கிடைத்ததே, உண்மையா? என்று கேட்டேன்.

அவர் சிரித்துவிட்டு அப்படி எதுவுமே இல்லை என்றார். தேர்தல் முடிந்த மறுநாள் செட்டியார் தெருவில் சில கடைகளை சூறையாடப் போவதாக வதந்தி உலவியதாம். உடனே கொழும்பு மத்திய தொகுதி பிரதிநிதியும், அமைச்சருமான பீட்டர் கெனமனுக்கு சிலர் டெலிபோனில் இதைத் தெரிவித்ததும், சிறிது நேரத்துக்கெல்லாம், மூன்று லொறிகளில் விசேஷ பொலிஸ் படை வந்துவிட்டதாயும், எவ்வித அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்றும் அங்கு எல்லாம் அமைதியாகவே இருப்பதாயும், கவலைப்பட எதுவுமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மலைநாட்டில்தான் கேகாலை முதலிய சிற்சில இடங்களில் காடையர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சில கடைகளிலும், வீடுகளிலும் சூறையாடியதாயும் இப்போது நிலைமை மேம்பட்டு விட்டதாகவும் அறியவந்தேன்.

கேகாலையிலிருந்து இங்கு குடும்பத்துடன் வந்த ஓர் அன்பர், மக்களுக்கு எவ்வித துன்பங்களும் இல்லை என்றும் காடையர் பணம், நகை துணிமணி முதலியவற்றை கொள்ளையடிப்பதையே நோக்கமாகக்கொண்டிருந்ததாயும் அங்குள்ள சிங்கள நண்பர்கள் தமக்குப்பெரிதும் உதவியாக இருந்ததாயும், இப்போது எல்லாம் அமைதியாகிவிட்டதால், தாம் திரும்ப அங்கு செல்லுவதாகவும் தெரிவித்தார். காடைத்தனங்களை அடக்க புதியஅரசாங்கமும் கண்டிப்பான நடவடிக்கைகளை எடுப்பதாகவும், மீண்டும் வகுப்புக்கலவரங்கள் ஏற்பட அனுமதிக்கப்படாதென்றும் தெரிகிறது. அந்தமட்டில் நல்லதுதான்.

0 0 0

கொழும்பிலே கிராண்ட்பாஸிலுள்ள செல்பி ஸ்டோர்ஸ் என்ற பெரிய வர்த்தகக்கிடங்கில் நேற்று முன்தினம் தீப்பிடித்து, பல லட்ச ரூபாய் சரக்குகள் சேதமாம்; இவ்வளவுபெரிய தீவிபத்து கொழும்பிலே சமீபத்தில் ஏற்பட்டதில்லை என்றும் தெரிவித்தார். தீப்பிடித்த காரணம் தெரியவில்லை.

0 0 0

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே,
ஆளாய அன்பு செய்வோம் மட நெஞ்சே அரன்நாமம்,
கேளாய் நம்கிளை கிளைக்கும் கேடுபடாத் திறனருளி,
கோளாய நீக்குமவன் கோளிலி எம்பெருமானே.
—அப்பர் அடிகள்,

## வடக்கில் பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம்

கோட்டை, சனி

வடபகுதியில் பனம் பொருள் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சு முக்கிய கவனம் எடுக்கவிருக்கிறது.

இத்திட்டத்தினால் வடபகுதியிலுள்ள இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்மானித்து வைப்பதுடன், பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்துவார் என்று அமைச்சு கருதுகிறது,

பனங்கட்டியை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதற்கென உயர்ந்த ஒரு ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அமைச்சுநம்புகிறது.

இந்தப்பனங்கட்டி நீரழிவுக்கு சிறந்த மருந்தென மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளதால் வெளிநாடுகளில் இதற்கு நல்ல 'மார்க்கெட்' ஏற்படும் என அமைச்சு நம்பிக்கை வைத்துள்ளது.

முதலில் பனம்பொருள ஆராய்ச்சி நிலையம் இங்கு நிறுவப்படவுளளது.

பரமேஸ்வராக்கல்லூரியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அரசாங்கம் [illegible]

## நல்ல அறிகுறி

இலங்கைப் பிரஜைகள் யாரும் இந்தியாவுக்குச் செல்வதாயின் இந்திய ஹைக்கமிஷனரிடம் இதுவரை விஸா வாங்க வேண்டியிருந்தது. இனி இந்த விஸா தேவையில்லை என்றும் மூன்று வாரங்களுக்கு மேல் இந்தியாவில் இருப்பதென்றால் தான் இந்திய விஸா வேண்டுமென்றும் இந்திய அரசாங்கம் இப்போது புதிய சலுகை அளித்திருக்கிறது. இலங்கையின்மீது இந்தியாவுக்குள்ள புதிய அபிமானத்துக்கும் நல்லெண்ணத்துக்கும் இது நல்லதோர் அறிகுறியாகும். இருநாடுகளுக்கும் இனி நட்புறவு பலப்படுமென்றும் இவ்விஷயத்தில் இந்தியா அதிகம் ஒத்துழைக்கத் தயாராக இருக்குமென்பதற்கும் இது நல்லதோர் அறிகுறியாகும்.

இதுவரை யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியா செல்ல வேண்டியவர்கள் கொழும்புக்கு பாஸ்போர்ட்டுகளை அனுப்பி வைத்து இந்திய ஹைகமிஷனிடம் கட்டணம் செலுத்தி விஸா வாங்க வேண்டிய சங்கடங்கள் எல்லாம் இருந்தன, இனி அந்த கஷ்டங்கள் இல்லை, இந்த நல்ல சமிகஞை காட்டியுள்ளதற்காக இலங்கைப் பொதுமக்களின் நன்றி உரியதாகும், இதே சமயம் இந்தியா யாத்திரை விஷயமாக இலங்கை அரசாங்கம் விஸாவை ரத்துச்செய்ய முடியாவிட்டாலும் கடும் நிபந்தனைகளையாவது நீக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல, இருதேச பிரதமர்களும் நல்ல நண்பர்களாகையால் இதுபற்றி இலங்கை அரசாங்கமும் புனராலோசனை செய்து இருதேச யாத்திரையையும் சுலபமாக்குவதாயின் இருதேசங்களுக்கிடையிலும் நல்லெண்ணம் பெருகி பரஸ்பரமும் சிறப்பாக இலங்கைக்கும் பெரிய உதவியாக இருக்கும்.

நாடு உற்ற இடரை நீக்கி திருநீற்றின் ஒளியை அந் நாடெங்கும் பரப்பிய மங்கையர்க்கரசி யாரையும் சைவ உலகம் மறக்கமுடியுமா?

சேக்கிழார்காட்டிய பெண்மையிலே இல்லறம் சிறந்து விளங்குகிறது. காரைக்காலம்மையாராகச் சிறப்புப் பெற்ற புனிதவதியார் இல்லறத்தில் தலைநின்று கணவனைப் பேணிய சிறப்பைக் காணமுடிகிறது. ''பாங்கில் வரும் மனையறத்தின் பண்பு வாழாமையில் பயில்வார்'' என்றுர். சிவச்சார்பு மிக்கவராயினும் கணவனுடைய கடமைகளிலேயோ குடும்பக் கடமைகளிலேயோ அவர் தவறவில்லை. மூவுலகிலும் பெறற்கரிய இப்பழம் எவ்வாறு கிடைத்தது? என்ற கணவன் வினவுக்கு ஒளிப்பு மறைப்பு இன்றி விடை கூறத் துணிகிறார். திருவருள் வாய்ப்புகளை மற்றையோருக்குச் சொல்லுதல் நன்றன்று எனினும் கணவனுக்கு உள்ளதை உள்ளபடியே உரைக்கவேண்டும் என்ற எண்ணம் சிறக்கிறது இவற்றையெல்லாம் இக்காலப் பெண்சமுதாயம்

அது [illegible] ஒளிதப்பண்பு என்று மாத்திரம் போற்றற்குரி [illegible] மற்றொருவரைச் [illegible] திற்கு தூண்டிவிட்ட வள! என்பது ஒருதலை.

ஏற்படுத்துவார் என்று [illegible] அமைச்சு கருதுகிறது. [illegible] முதலில் [illegible] ஆராய்ச்சி நிலையம் இங்கு பனங்கட்டியை வெளி நிறுவப்படவுள்ளது.

### இ. தொ. கா. வில்பிளவு?

# அஸீஸ் காங்கிரஸுக்கு செல்வாக்கு வளர்கிறது

இலங்கையின் மிகப்பெரிய தொழிற்சங்க மாகக்கருதப் படும் இந்திய இனத்தலைவர்களா பெருவாரிஅங்கத்தவர்களைக்கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தற்போதைய தலைமைக்கு தோட்டத் தொழிலாளர் மத்தியில் பலத்த எதிர்ப்பு வலுபெற்று வருவதாக செய்திகள் கிடைக்கின்றன. திருமதி பண்டாரநாயக்கா அரசாங்கம் பெரும்பான்மைப் பலத்துடன் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து இந்தநிலைமை ஏற்பட்டிருக்கின்றதாம்

இந்த எதிர்ப்புகளின் காரணமாக இ. தொ. காங்கிரஸின் தற்போதைய தலைவர் திரு. எஸ். தொண்டமான் பதவியிலிருந்து இறக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது. கடந்த சுமார் 20 ஆண்டுகளாகதிரு. தொண்டமான் இந்தப்பதவியை வகித்துவருகின்றுர்.

இதற்கு நேர்மாருக திரு. அப்துல் அஸீஸின்தலைமையிலான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தோட்டப் பகுதிகளி முன்னைவிட அதிக செல்வாக்குப் பெறுவதாகக் கூறப்படுகின்றது. கடந்ததேர்தலில் கூட்டணியைஆதரித்ததிரு. அஸீஸ் கடந்தபத்து ஆண்டுகளாக தொண்டமான் வகித்த நியமன எம். பி. பதவியையும் பெற்றிருக்கிறுர்.

இதில் கசப்பான உண்மை என்னவேன்றுல் கடந்தகாலங்களில் இ. தொ. காங்கிரஸை பலமாக ஆதரித்து வந்த தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியில் அதிமாக நன்மை எதையும் அனுபவிக்கவில்லை திரு தொண்டமானே கவலைப்பட்டுக்கொண்டது போல், கடந்த 15 ஆண்டுகளாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பவம் அதிகரிக்கப்படவில்லை. இந்த நிலைமையில், உலக சந்தையில் தேயிலை விலை வீழ்ச்சியின் காரணமாக பல தோட்டங்களிலும் மூன்று நாட்கள் மாத்திரமே வேலை கொடுக்கப்பட்டது இது போதாதென்று தொழிலாளர்பிள்ளைகளின் மத்தியில் படுமோசமாக வேலையில்லாத்திண்டாட்டம் நிலவுகின்றது.

தேர்தலுக்கு பின்னர் இப்போதைய அரசுக்கு ஆதரவு தெரிவித்துதிரு. தொண்டமான் விடுத்த அறிக்கையில் மேற்படி நிலைமைக்கு லங்கா சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட்கட்சியுமே காரணம் என்று குற்றஞ்சாட்டினுர். 1947-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் இந்தக்கட்சிகளை ஆதரித்தார்கள் என்றும் அதனுல் தமது குடி உரிமைகளைக்கூட இழக்கநேர்ந்தது என்றும் அவர் குற்றஞ்சாட்டினுர். பல ஆண்டுகளாக தோட்டத்தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டு பத்துலட்சம் பேர் கொண்ட இந்த இனம் மிகவும் குறுகிய சிறுபான்மையாக ஒதுக்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார் இப்பொழுது அரசாங்கத்தில் லங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட்கட்சியும் சேர்ந்திருப்பதால்இந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் களையப்பட வேண்டியது அவர்கள்கடமையென்று திரு. தொண்டமான் குறிப்பிட்டார்.

ஆனுல் ஜனுப் அஸீஸ் இ. தொ. கா.வையே மேற்படி நிலைகளுக்கு காரணம் என்று குற்றஞ்சாட்டுகிறுர். முதலாளிகளுடன் சேர்ந்து தோட்டத்தொழிலாளர்களைக்காட்டிக்கொடுத்ததாக இ. தொ, கா. வை அவர்கண்டித்தார். ஜனநாயககாங்கிரஸ் மற்றும் வேறு சங்கங்கள் ஆரம்பித்த வேலை நிறுத்தங்கள் பலவற்றில் இ. தொ. கா. முதலில் சேர்ந்து பின்னர் சிறுசலுகைகளுக்கான ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு வேலைக்குத் திரும்பியிருக்கின்றது. என்று அஸீஸ் சுட்டிக் காட்டினுர்.

இந்தக் குற்றச்சாட்டை கம்யூனிஸ்ட் தொழிற்சங்கமான ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியன் தலைவர் திரு.எஸ், நடேசன் ஆதரித்திருக்கிறுர்.

இப்போது தோட்டங்களில் நிலவும் நிலைமைகளுக்கு இ. தொ. கா. வேபதில் சொல்லியாகவேண்டும்.

1949-ல் குடியியல் உரிமைகளைப் பறித்த யு. என். பி. அரசாங்கத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக இ.தொ கா. ஒன்றுபட்டிருந்துள்ளது ஆனுல் பலன்எதுவுமேகிடைக்கவில்லை. பொதுத்தேர்தலின் போது யு என். பியை இ. தொ. கா. ஆதரித்தது ஆனுல் தோட்டத்தொழிலாளர்கள் இ. தொ. கா. தலைமையைப் புறக்கணித்துவிட்டு கூட்டுமுன்னணியை ஆதரித்திருக்கிறுர்கள் என்று திரு. நடேசன் குறிப்பிட்டிருக்கிறுர். இதைத் திரு. தொண்டமான் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனுல் உண்மை என்னவெனில் ஐக்கிய தேசியக்கட்சிதோட்டப்பகுதிகளில் நுரலையில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது இ. தொ. கா 25 தொகுதிகளில் தேர்தலை நிர்ணயிக்க முடியும் என்று அதன் தலைவர்கள் கூறினுர்கள் இப்பொழுது திருமதி பண்டாரநாயக்கா அரசு உடனடியாக மேற்கொள்ளககூடிய நல்லநடவடிக்கைகளின் காரணமாக இ. தொ. கா. அங்கத்தவர்கள் பெருவாரியாக ஐ. தொ. காவில் சேர்ந்து விடுவார்கள் என்று கருதப்படுகின்றது, (சி பி ஏ)

### பரமேஸ்வராக்கல்லூரியில்

# ஜி. ஸி. ஈ. (உயர்) வகுப்பு நடாத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு திருநெல்வேலியிலுள்ளபரமேஸ்வராக் கல்லூரியில் கல்விப்பொதுத் தராதரச் சிரேஷ்ட தராதர வகுப்புகளை நடத்துவதற்கு கல்வி மந்திரியை கோரும் தீர்மானம்யாழ் பெற்றுர் ஆதரவாளர்சங்ககூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சங்கத் தலைவர் திரு. சிவ. உ. சோமசேகரத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். இந்து மகளிர்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தின் வேலையை பூர்த்திசெய்வதற்கு கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்வதென்ற தீர்மானமும் நிறைவேறியது.

யாழ் இந்துக்கல்லூரி, மகளிர் கல்லூரிகள் தொடங்கும்போதும், விடும்போதும் பொலிஸ்பாதுகாப்பு செய்து தரும்படி வடபிரதேச பொலிஸ் அதிபரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

சங்கத்தின் உபதலைவரும், நல்லூர்த் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவருமான திரு. சி. அருளம்பலத்தைப் பாராட்டி விருந்துபசாரம் நடத்துவதென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (கு. வி. ம)

## ஹிப்பிகள் நழுவுகிறுர்கள்

கோட்டை சனி

நாட்டின்பல பாகங்களிலும் மூலை முடுக்களில் எல்லாம் காணப்பட்டுவந்த அமெரிக்க 'ஹிப்பி'கள் இப்பொழுது படிப்படியாக வெளியேறிக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது புதிய அரசாங்கம பதவிக்கு வந்த பிறகு இவர்கள் மெதுவாக நழுவிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றன.

# தீவுப்பகுதியின் குறைபாடுகள் நீங்க நடவடிக்கை வேண்டும்

## துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டு வாடி வீடு புனரமைக்கப்பட வேண்டும்

— வி.இன்னுசிமுத்து —

### துறைமுகம்

வடபகுதியில் பழங்காலத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக விளங்கிய துறைமுகங்களில் ஊர்காவற்றுறை துறைமுகமும் ஒன்றுகவுள்ளது. இத் துறைமுகத்தை விஸ்தரிப்பதற்கான தீர்மானங்களோ இதுவரை எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. வெளிநாட்டு கப்பல்கள் இத்துறைமுகத்தில் தங்கிச் சென்ற காலமும் ஒன்றிருந்தது. தற்போது எபநேசர் என்ற பாரிய கப்பலொன்று இத்துறையில் தங்கி நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இன்னும் இந்தியாவிலிருந்து 'டிங்கிகள்" இத் துறைமுகத்திற்கு ஆடுகள், மற்றும் உணவுப் பொருட்களையும் கொண்டு வருகின்றன சென்ற மாதமுற்பகுதியில் இரண்டு டிங்கிகள் பம்பாய் வெங்காயத்துடன் இத்துறையை அடைந்து இறக்குமதி வேலைகளை முடித்துவிட்டு சென்றதும் குறிப்பிடக் கூடியதாகவுள்ளது. எனவே இத்துறைமுகத்திற்கும் கப்பல்கள் வந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யவும், அதன்மூலம் தீவுப்பகுதி தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறவும் வழிபிறக்கும், தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்வாரென்று நம்புகிறேன்.

### சுங்க இலாகா

ஊர்காவற்றுறை துறைமுகத்தில் அமைந்துள்ள சுங்க இலாகா கட்டிடம் மிகவும் பழமை வாய்ந்ததாக காணப்படுகிறது, இக் கட்டிடங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டியதும் அவசியமாகின்றது. இன்னும் சுங்க இலாகாவின் வேலிகள் இரண்டு பக்கமும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. கட்டிடங்களுக்கு பாதுகாப்பு அவசியமாகையால் சுற்றிவர மதில் அமைக்க வேண்டியதும் மிகவும் அவசியமாகின்றது. பொருள்களை சேமித்து வைக்கும் அறையும் மிகவும் பழமையானதாகவுள்ளதால் புதிதாக, நவீன முறையில் அது அமைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

### வாடிவீடு

தீவுப்பகுதியில் ஊர்காவற்றுறை பிரசித்திபெற்ற இடமாகவுள்ளது. வெளியூர்களிலிருந்தும் பலர் இங்குவந்து கடற்கோட்டை, முதலிய இடங்களை பார்வையிட்டு செல்கின்றுர்கள். இவர்கள் வசதியாக தங்கி நின்று செல்ல வாடிவீட்டில் வசதிகள் எதுவும் இல்லை. மிகவும் பழமைவாய்ந்த இக் கட்டிடத்தில் படுக்கை வசதிகள் இல்லை. திடீரென இங்கு சென்றுல் உணவு கிடையாது. தளபாடங்களும் மிகவும் கேவலமான நிலையிலேயே உள்ளன. இவ்வாடிவீடும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசரமான ஒரு செயலாகும்.

### பஸ் டிப்போ

யாழ்ப்பாணத்திலிருந்து பல பாதைகளால் பஸ்கள் தீவுப்பகுதிக்கு சேவையிலீடுபடுகின்றன. உதாரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து 777,778,779,780 ஆகிய பாதைகளால் பஸ் சேவை நடைபெறுகிறது. இதே நேரத்தில் ஊர்காவற்றுறையிலிருந்து இறுப்பிட்டிக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானுக்கும், இறுப்பிட்டிக்கும் பஸ்கள் சேவையிலீடுபட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே வேலணையிலோ ஊர்காவற்றுறையிலோ ஒரு பஸ் டிப்போ நிறுவுவதன் மூலம் தீவுப்பகுதியின் பஸ்போக்குவரத்தை சீராக்கலாம். சில காலத்துக்கு முன்பு தீவுப்பகுதியில் பஸ் டிப்போ நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததும் குறிப்பிடத் தக்கது. இன்றும் யாழ்ப்பாணத்திலிருந்து மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு சேவையிலீடுபடும் பஸ்களில், நாட்டின் மற்றைய பாகங்களை விட அதிக கட்டணம் அறவிடப்படுகிறது. எனவே இக் கட்டண விடயத்தில் தீவுப்பகுதியில் உள்ள பிரயாணிகள் சங்கங்கள் தலையிட்டு கட்டணத்தை குறைக்கநடவடிக்கை எடுக்கவேண்டும்.

### குளங்கள் ஆழமாக்கப்பட வேண்டும்

தீவுப்பகுதியிலுள்ள பல குளங்கள் ஆழமாக்கப்படாமல் உள்ளன. இக்குளங்களை ஆழமாக்கி, மாரிகாலத்தில் தண்ணீரைத் தேக்கி வைத்து கோடைகாலத்தில் உப உணவுப்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க இத் தண்ணீரைப் பயன் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் வெங்காயம் மிளகாய் போன்றவற்றின்செய்கையை அதிகரிக்கலாம்.

### குடிநீர்ப் பிரச்னை

ஊர்காவற்றுறையிலும் புங்குடுதீவிலும் நிலவும் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிவர்த்தியாக்கப்பட வேண்டும். நாரந்தனைப்பகுதியில் போதியளவு நீர் இருக்கிறது தற்போது நாரந்தனையில் இருந்துதான் ஊர்காவற்றுறைக்கு குழாய் மூலம் நீர் கொண்டு செல்லப்படுகிறது. எனவே மேலதிக கிணறுகளைத் தோண்டி, ஊர்காவற்றுறைக்கும், நாரந்தனைக்கும் காலைமாலை போதியளவு குடிநீர்விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.


## விற்பனையாளர் நியமனம்

நீர்வேலிப் பகுதியில் எமது பத்திரிகை விற்பனையாளராக திருவள்ளுவர் ஸ்ரோர்ஸ், நீர்வேலி என்னும் விலாசதாரரை நியமித்திருக்கிறேம் என்பதை தெரிவிக்கிறேம்.

வாடிக்கைக்காரர்களுக்குச் சைக்கிள் மூலம் விநியோகிக்கப்படும். 2298


இப் பத்திரிகை ''ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org